# கன்னிப் பருந்து

## 1

நவரத்னா அபார்ட்மெண்ட்ஸ்!

ஆகாய மேகங்களைத் தொடும் உயரத்தோடு அம்சமான லட்சணத்தோடும் அதோ இந்த மடிப்பாக்க செல்லும் சாலை மேல்...

க்ரீச்ச்... அதன் முன் தேய்ந்து நின்ற எக்ஸெ மாருதியிலிருந்து இறங்குகிறாள் ரம்யா.

பம்பாயிலிருந்து சினிமாவில் நடிப்பதை நிறுத்தி கொண்டு ஸ்ரீதேவியே நேரில் வந்த மாதிரி இருக்கிறாள்.

'போனிடைல்-ஹேர்ஸ்டைல்,

ஜீன்ஸ் பேண்ட், டீ ஷர்ட்

ஹை ஹீல்ஸில் குதிரை போல் நடை...'

'யார் இவள்?'

அபார்ட்மெண்டின் வம்பானந்தாவாகிய சுப்புடு சாஸ்தி பார்த்தபடியே காய்கறி வாங்க கடந்து போகிறார்.

முதல் ஃப்ளோரில் வெளி கிரில்லில் துணி உலர்த்த வந் யூனியன் பேங்க் பிரேமா நின்று வெறிக்கிறாள். டய உருட்டி விளையாடும் ஏழு வயது சுதாகர்கூட தன் வயதை மறந்து ரம்யாவைப் பார்த்து நிற்கிறான். அவள் ஒயிலா



லிப்ட் முன் போய் நிற்பதைப் பார்த்தால் ஏற்கனவே வந்து போனவள்போல் தெரிகிறது. லிஃப்டுக்கு எதிர் சாரியில் இருக்கிறாள் தாரிணி. இந்த மாதிரி வருவோர் போவோரை தொணப்பி எடுக்கும் கேஸ். யாராவது சட்டை செய்யாமல் போனால் அதற்காக வெம்பி அழும் குணச்சித்திரம்.

அவள்கூட 'யார் இந்த பெண்?' என்று வியந்து பார்க்க, லிஃப்ட் திறந்து கொள்கிறது.

உள்ளே அவள் ஏறிக்கொள்ள மேலேறுகிறது.

இரண்டாவது ஃப்ளோரில் இறக்கியும் விடுகிறது. இறங்கின ஜோரில் எதிர் வரிசையில் வாசலில் ஸ்டிக்கர் கோலம் போட்ட ஃப்ளாட் முன் போய் கால்கள் நிற்க, கதவில் 'விஸ்வநாதன்/சுந்தரம் பாசனர்ஸ்' என்கிற பிளாஸ்டிக் எழுத்துக்கள்.

சரியான விலாசம்தான்.

பஸ்ஸர் அலற ஆரம்பிக்கிறது. கதவும் திறக்கப்பட "வாவ் ரம்யா..."-திறந்து கொண்ட கதவுக்குப் பின்னால் இருந்து உற்சாகமான குரல். அழைப்பவள் ராதிகா! உள் நுழைகிறாள்.

"வெரி சர்ப்ரைஸ்டி உன் விசிட். ஹவ் டு யூ ஃபைண்ட்?"

"ஆமா பெரிய நியூயார்க் இது. கண்டுபிடிக்கறது கஷ்டமா என்ன?"

"உக்காரு... ஆமா நியூயார்க்ல ஃபிளாட்டை கண்டுபிடிக்கறது கஷ்டமா என்ன?"

"இல்லியா பின்னே...? ஐசக் டவர்னு ஒரு அபார்ட் மெண்ட். நூத்தி நாலு அடுக்கு. அதுல தொண்ணூத்து ஏழாவது அடுக்குல இருபத்தியோராவது வீடுன்னு ஒரு அட்ரஸ் கொடுத்து உன்னை அனுப்பி விட்டா தெரியும் கஷ்டம்..."

“எனிவே... நீ வந்ததுல ரொம்ப சந்தோஷம். எப்ப இருக்கார் உன் அப்பா?”

“ஆஸ் யூஷுவல்.”

“ஆமா எப்ப மெட்ராஸ் வந்தீங்க...?”

“ஜஸ்ட் ஒன் வீக்.”

“அடுத்து எந்த கண்ட்ரி?”

“நத்திங். இனிமே கண்ட்ரி, சிடி, வில்லேஜ், டவு எல்லாம் இந்த மடிப்பாக்கம்தான். அப்பா ரிடையர்டு!”

“என்னடி சொல்றே?”

“ஆச்சரியப்படாதே-இன்னும் கேளு. நானும் அப்பாவு நீ இருக்கற இந்த தி சேம் அபார்ட்மெண்ட்டுக்கே வந்துட போறோம்.”

“ஈஸ் இட். எக்ஸலன்ட்!” ராதிகாவிடம் நிஜமாலுமே மகிழ்ச்சி, பால்ய பள்ளி ஸ்னேகிதி வரப்போகிறாள் என்கி குதூகலம்.

“ஆமா எந்த ஃப்ளாட்? எனக்கு தெரிஞ்சு இங்க எதுவுமே வேகன்ட். இல்லையே?”

“தேர்ட் ஃப்ளோர்ல அந்த இரண்டாம் நம்ப ஃப்ளாட்தான்!”

-அதைக் கேட்ட மறுநொடி ராதிகாவுக்கு மயக்கம் வராத குறை!

## 2

திணறியபடி வந்து நிற்கிறது அந்த லாரி. அதன் ரிஜிஸ்டர் எண்ணில் ஆந்திரா எனும் தெளிவு. சாமான்கள் இறங்க ஆரம்பிக்கின்றன. அபார்ட்மெண்ட்டே வேடிக்கை பார்க்கிறது. ரம்யா சாமான்களை கைட் செய்தபடி இருக்கிறாள். கூட



ஒரு ஒற்றை நாடிமனிதர். பேண்ட்டையும், ஷர்ட்டையும் இன் செய்து டை கட்டியிருக்கும் தினுசில் அநியாயத்துக்கு ஒரு அதிகார தோரணை. அபார்ட்மெண்ட்டின் நாலாவது ஃப்ளோரில் ஜன்னல்வழியாக ஷேவ் செய்தபடி இந்த ஷிப்டிங்கை பார்க்க ஆரம்பித்த ராமசேஷனுக்கு ஒரு கணம் தூக்கி வாரிப் போடுகிறது.

“ஏய் இவர் கோபால்ராவ்.” என்கிறார் துப்பறிந்த மாதிரி.

“எந்த கோபால்ராவ்?

“மொரிஷியஸ்லையும், எதியோப்பியாவிலேயும் இந்தியன் அம்பாஸடரா இருந்த வாங்கல் கோபால்ராவ் இவர்.”

“நன்னா பாருங்கோ, அம்பாஸாடர்னா சொந்தமா ஒரு வீடு இல்லாம இருக்குமா என்ன... இப்படியா அபார்ட்மென்ட்ல வந்து அடைவா?”

அதுலேயும் அந்த பேய் ஃபிளாட்ல?”-இது அவர் மனைவி மங்களாம்பிகை.

“அவர் கோபால்ராவேதான். ஒன் மினிட் போய் பாத்துட்டு வந்துடறேன்.

“அப்படியே வேற இடமே கிடைக்கலியான்னு கேட்டுட்டு வாங்கோ...”

ராமசேஷன் பாதி சவரத்துடன் ஓடுகிறார்.

மூச்சிறைக்க கோபால்ராவ் எதிரே போய் நிற்கிறார்.

“குட்மார்னிங் சார்...”

“வெரி குட்மார்னிங்...”

“என்ன சார்... என்னைத் தெரியலியா?”

“தெரியலையே...”

“நான் சீனியர் க்ளார்க் ராமசேஷன். நீங்க ஹைதராபாத் செகரடேரியட்ல இருந்தப்ப உங்களைப் பார்க்க வந்துருக்கேன்.”

“ஐ.சீ...”

“என்ன சார்... அபார்ட்மெண்ட்டுக்கே இப்ப வந்துட்டேளே?”

“ஏன் வரப்படாதா?”

“சேச்சே... நான் அப்படி சொல்லலை. நீங்க மகா பெரிய மனுஷர். உங்களுக்கு எதுக்கு இந்த சந்து ஃப்ளாட்டுன்னுதான்...”

“எனக்கு சந்தடி வேணும் மிஸ்டர் ராமசேஷன். தனியா வாழ்ந்து போரடிச்சு போச்சு. ரம்யா காலேஜ் போயிட்டா யார் இருக்கா என்னோட பொழுத கழிக்க சொல்லுங்கோ...”

“டாட், அங்க என்ன பேச்சு... இந்த சோபாக்காரர் கூட போய் கொஞ்சம்கூட இருந்து இறக்கி வைக்காம...?”

-நடுவில் பம்பாய் நுழைகிறது ரம்யாவின் குரல்.

“ஐ ஆம் சாரி... என் டாட்டர் கூப்பிடறா, லேட்டர் வில் மீட்.”-கோபாலராவ் ஒரு சோபாவை முக்கல் முனகலோடு சுமந்து செல்லும் கூலிக்காரர்களைப் பின் தொடர ஆரம்பிக்கிறார்.

“உம் சீக்கிரம்... இன்னும் நிறைய இறக்க வேண்டியிருக்கே.”

-ரம்யாவிடம் அதட்டலான தோரணை.

அபார்ட்மெண்ட்டே வியக்கிறது அதைப் பார்த்து. ஒரு சின்னப் பெண்ணிடம்தான் எத்தனை வேகம்... எத்தனை மிடுக்கு! கீழே லிஃப்ட்டுக்கு எதிர் ஃப்ளாட் தாரிணிக்கு.



அவர்கள் யார் என்றறிய வேண்டிய ஆர்வத்தில் தலையே வெடித்துவிடும் கண்டிஷன்: பேசி விட்டு வரும் ராமசேஷனை கிண்ட ஆரம்பிக்கிறாள்.

“என்ன மாமா... யார் இவாள்ளாம் தெரியுமா உங்களுக்கு!”

“தெரியுமாவா? நன்னா கேட்ட போ. சார் ஒரு ரிடயர்ட் ஐ.ஏ.எஸ். அம்பாஸடர்...”

“கார் இருக்காக்கும்.”

“விளக்கெண்ணெய். அம்பாஸடர்னா தூதர்னு பேர்-இதுகூட தெரியாதாக்கும்.”

“அம்பாஸடரா?”

“ஆமா... வாயப் பிளக்காதே. போய் வேலையப் பாரு சாருக்கு நான் திக் ஃப்பிரெண்டு,”

“எனக்கும் அதுதான் ஒண்ணும் புரியலை. மூணு வருஷமா பூட்டிக்கிடந்த ஃப்ளாட்டுக்கு-நினைச்சாலே குலை நடுங்கற ஃப்ளாட்டுக்கு எப்படி வர ஒத்துண்டார்ன்னு தெரியலையே...”

“கேக்கறதுக்கு என்ன?”

“எங்க கேக்க விட்டா அந்தப் பொண்ணு. ஒரே அதட்டல்.”

“உங்களையா?”

“என்னை அதட்ட விடுவேனா... அவரைத்தான்.”

“பொண்ணைப் பார்த்தா ராங்கிக் காரியாதான் தெரியறா. ஹூம்... தலையெழுத்தை யார் மாத்த முடியும்.”

“வாஸ்தவம் தான்.”

"எண்ணி நாலே நாள் பார்த்துண்டு இருங்கே துண்டைக் காணோம், துணியைக் காணோம்னு அ ஓடப் போறதை.

-தாரிணி ராமசேஷன் அரட்டைக்கு நடுவில் விச் சத்தம் போட்டபடி வந்து நிற்க, உள்ளிருந்து இப்போ வெளிப்படுகிறாள் ரம்யா.

தாரிணி உடனே சுதாரிக்கிறாள்.

"வரா... வரா... அந்தக் குட்டி வரா."

"எக்ஸ்யூஸ்மீ. ஐவாண்ட் டு இன்ட்ரடியூஸ் செல்ஃப்."

"சொல்லுங்கோ."

"மை நேம் ஈஸ் ரம்யா. தேர்ட் எம்.பி.பி.எஸ். பண்றே நேத்து வரை ஹைதராபாத். இனிமே மெட்ராஸ் தான்.

"சந்தோஷம்... என் பேர் தாரிணி. எங்க ஆத்துக்கா டி.வி.எஸ்.ல மேனஜரா இருக்கார்."

"வெரி ஹாப்பி... இங்க டெலிபோன் பூத் எ இருக்குன்னு சொல்ல முடியுமா? நான் குடி வந்துட் விஷயத்தை ஸ்னேகலதாக்கு சொல்லணும். ஐமீன் இ அபார்ட்மென்ட் ஓனரோட டாட்டர்."

"அப்படியா... நீங்க ஸ்னேகலதா ஃப்ரெண்டா. உள் வாங்கோ-வெளியிலேயே நிக்கறேளே. மாமா நா உங்களை அப்புறம் பாக்கறேன்."

"பாவி... படுபாவி... பல்டி சுந்தரிடி நீ..." ராமசேஷ முனங்கலோடு நகர்ந்து கொள்ள உள் நுழைகிறாள் ரம்ய

"எங்காத்துலையே ஃபோன் இருக்கு பண்ணி கோங்கோ."

"தேங்க்யூ..."



-ரம்யா எண்களை சுழற்ற ஸ்னேகலதா என்னும் அவளது சினேகிதியைப் பிடிக்கிறாள்.

"ஹாய் ஸ்னேக்!"

"ஹாய் ரம்."

"குடி வந்தாச்சுடி. பூட்டிக் கிடந்த ஃபிளாட்டா? ஒரே குப்பை. சுத்தம் பண்ணவே பலமணி ஆச்சு."

"ரம்யா... பார்த்துடி. நான் எவ்வளவோ சொல்லியும் நீ கேக்கலை."

"இட்ஸ் ஓ. கேம்மா. நான் பாத்துக்கறேன். லுக். உனக்கு ஒண்ணும் மட்டும் சொல்லிக்கிறேன், இந்த ஆவி பேய் பிசாசு எல்லாம் அக்மார்க் புருடா. யூ டோன்ட் ஒர்ரி."

"என்னவோடி... இப்படி சொல்லிண்டு குடிவந்தவாள்ள நாலு பேர் இப்ப உயிரோட இல்லை. அது மட்டுமில்லே. அந்த ஃப்ளாட்டுக்கு இரண்டு பக்கத்து ஃப்ளாட்காரங் களுமே கூட ஆறுமாசம் நீடிக்கறதில்ல.

ஒரே ஒருத்தர் மட்டும் தனியாளா இருக்கறதுனால இருந்துகிட்டு வரார். அவரும் பெரும்பாலும் ஃப்ளாட்ல தங்கறது கிடையாது. ஹி ஈஸ் எ ரெப்ரசன்டேடிவ்-ஊரைச் சுத்திகிட்டிருக்கற கேஸ்."

"ஐ.சீ."

"டீ... நான் என்ன கதையா சொல்றேன். ஐ.சீங்கறே. கேர்ஃபுல் ரம்யா."

"டோன்ட் ஒர்ரி..."-தொலைபேசியை முடக்கி விட்டு திரும்புபவள் எதிரே இப்போது ஆவி பறக்கும் காபியுடன் தாரிணி.

"சாப்டுங்கோ."

"எதுக்கு இதெல்லாம்...?"

"அப்படி சொல்லப்படாது. என் அந்த்ரு… சாப்பிட்றதுக்குன்னே வர்றவா நிறைய பேர் இருக்…

-ரம்யா தாரிணியின் அந்த பீத்தலை ரசித்தபடி… கூடிக்கிறாள். நிஜமானுமே சூப்பராகத்தான் இருக்…

"ஆமா உங்களுக்கு அம்மா…" முழுவதுமாய்… முன்பே ரம்யா ஒரு கையை ஆகாயத்துக்கு காட்டி… சேர்ந்து விட்டாள் என்கிறாள்.

"உச்ச்… உச்ச்…"-இது தாரிணி.

"நானும் அப்பாவும் மட்டும்தான்."

"அப்பா ஏதோ அம்பாஸடராவோ, மாருதியா… இருந்தா கேள்விப்பட்…"

-ரம்யா அவள் ஆங்கில பலவீனம் காரணமாக… என்று சிரித்து விடுகிறாள்.

"ஏன் சிரிக்கிறேள்."

"அம்பாசடர்னா தூதர்னு அர்த்தம் மாமி. அ… தூதரா இருந்தவர். அஃப்கோர்ஸ் மாருதிகூட தூ… தானே… ராமதூதன்."

-தாரிணி அதைக்கேட்டு அசட்டு சிரிப்பு சிரித்து… முக்கியமான அந்தக் கேள்விக்கு வருகிறாள்.

"வேற நல்ல ஃப்ளாட்டுகள் நிறைய மெட்ரா… இருக்கே…"

"பட் அங்கல்லாம் பேய் பிசாசு இல்லியே!"

பதிலா இது! பட்டாசு!

## 3

**மொ**த்தமாய் அளந்தால் தொள்ளாயிரம் சதுர அ… தேறும். பெரிதாக ஒரு ஹால்-ஹாலை ஒட்டி வராண்ட…



வராண்டாவை ஒட்டி வலது பக்கம் பெட்ரூம். வராண்டாவை கடந்தால் ஹாலுக்கு பேரலல்லாக கிச்சன். வராண்டாவுக்கு இடது பக்கத்தில் ஸ்டோர் ரூம்.

ஹாலுக்கு மேற்கில் ஒரு நிலைக்கதவு. திறந்து கொண்டுபோய் நின்றால் ஐம்பது சதுரத்தில் பால்கனி. வளர்ந்த-வளர்ந்து கொண்டிருக்கிற சென்னையைப் பார்க்கத் தோதாக.

ஹாலுக்கு கிழக்கில் பாத்ரூம் டாய்லெட். பளிங்குக் கல்லில் இழைத்திருக்கிறார்கள். கெய்சரெல்லாம் இருக்கிறது. ஆனால் பயன்படுத்தியே பலவருடம் ஆனதால் பாழ்பட்டுத் துருவேறிக் கிடக்கிறது.

ஸ்விட்சைப் போடலாம் என்றால் பிளக்பாயின்ட்டில் குளவிக்கூடு.

வாயில் டூத் பிரஷ்ஷை உழலவிட்டுக்கொண்டு யோசித்துக் கொண்டிருக்கிறாள் ரம்யா.

'அடுத்து என்ன செய்யலாம்?'

-ஹாலில் கோபால்ராவ் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறார். அவர்களது ஆசை ஜீவனான நாய் டோனி கூட நைட் ஷிப்ட் பார்த்த கோபால கிருஷ்ணா ராவ் தோளைத் தொட்டு ஒரு உசுப்பல்.

கோபால்ராவ் திரும்பாமலே பதில் தருகிறார்.

"என்னம்மா… என்ன வேணும்?"

"நத்திங்… ஐ டோன்ட் வான்ட் எனிதிங்"-உள்ளிருந்து பதில்.

"அப்ப எதுக்கு கூப்பிட்டே…?"

"நானா?"

“பின்ன தோளைத் தொட்டு உசுப்பினது யார்? பேப்பரை மடித்தபடி திரும்பிப் பார்த்தால் ஒருவரை காணோம். பாத்ரூம் கதவுகூட தாழிடப்பட்டு உள்ளிரு தான் ரம்யா குரல் கேட்கிறது-என்றால் தோளை தொட்டது யாராக இருக்கும்? பிரமையோ...?

அப்படித்தான் இருக்க முடியும்...

திரும்பவும் பேப்பரில் ஊன்ற ஆரம்பிக்கிறார்.

“அப்பா கொஞ்சம் ஸ்க்ரூ ட்ரைவர் எடுத்துத் தாங்க...

-திரும்பவும் உள்ளிருந்து ரம்யா.

“எதுக்கும்மா?”

“இங்க பிளக் பாயின்ட்டெல்லாம் அடைஞ்சுகிடக்கு

“தரேன்... மெயினை ஆஃப் பண்ணிட்டு அதுல எல்லா கை வை.”

“நீங்களே ஆஃப் பண்ணிடுங்க.”

-கோபால்ராவ் முதல் காரியமாக ஹாலின் ஒரு ஓரமா உள்ளடங்கி மைக்கா கதவுகளால் பூட்டப்பட்டு கிடக்கு மெயின் ஸ்விட்ச் போர்டை திறக்கிறார். அதை ஆஃ செய்துவிட்டு மேஜை டிராயரை திறந்து ஸ்க்ரூ டிரைவரையும் தேடி எடுத்துத் தந்துவிட்டு வந் அமருகிறார்.

திரும்பவும் ஹிந்துவில் பார்வையின் மேய்ச்சல் புழுக்கமாய் இருந்தது. இருக்கட்டும். சிறிதுநேரம் கழித் ஃபேனை போட்டுக் கொள்ளலாம். உள்ளே ரம்யா தன் வேலையை முடித்துக் கொள்ளட்டும். அவர் நினைத் முடித்த மறுநொடி அவரது தலைக்குமேல் உள்ள ஃபேன் ஸ்விட்சை தட்டிவிட்ட மாதிரி சுழல ஆரம்பித்தது. ஹிந் படபடத்தது. அண்ணாந்து பார்த்த கோபால்ராவுக்கு இப்போதுதான் நிஜமாலுமே வியர்த்தது.



இது எப்படி சாத்யம்?

மெயின் ஸ்விட்சை ஆஃப் செய்திருக்கும்போது... பகீர் என்றது. கழுத்தை வளைத்து திரும்பிப் பார்க்கிறார், மெயின் ஸ்விட்ச் போர்டு மூடித்தான் இருக்கிறது. இப்பொழுது தானே எழுந்து சென்று ஆஃப் செய்தோம்? கேள்வி பிடரியை பிய்க்கும்போது உள்ளே பாத்ரூமில் ரம்யாவிடமிருந்து ‘வீல்ல...’ என்கிற ஒரு அலறல்.

ஐய்யய்யோ...!

## 4

ஆஸ்பத்திரி படுக்கையில் மெல்ல கண் விழிக்கிறாள் ரம்யா. அருகில் அழுத முகத்தோடு கோபால்ராவ். ராதிகா, ஸ்னேகலாதா, தாரிணி என்று அவளறிந்த நட்பு வட்டங்கள் கூட சுற்றிலும்.

ரம்யா கண் விழித்ததில் அனைவருக்கும் மகிழ்ச்சி.

“அம்மாடி... எப்படி இருக்கு. எப்படி இருக்குடா உடம்புக்கு இருக்கு?”

ரம்யாவிடம் பதிலில்லை. மாறாக வெறிக்கிறாள்.

“ஏன் அப்படி பார்க்கறே?”

“பாக்காம?”-அவளிடம் ஈனசுரமான கேள்வி.

“அதான் ஏன்னு கேக்கறேன்.”

“மெயின் ஸ்விட்சை ஆஃப் பண்ணச் சொன்னேன்ல?”

“பண்ணேம்மா...”

“பண்ணியிருந்தா எனக்கு எப்படிப்பா ஷாக் அடிச்சிருக்கும்?”

“ஐய்யோ! பண்ணேம்மா...”

"நோ... நீங்க மறந்துட்டு இங்க பொய் சொல்றீங்க."

கோபால்ராவால் அதற்கு மேல் அவளிடம் பே முடியவில்லை. கைகளைப் பிசைந்து கொண் மௌனியாகிறார். முகத்தில் சொல்ல முடியாத ஒரு வ வேதனை.

"ஏன் அங்க்கிள் இப்படி பண்ணீங்க...?"-ஸ்னேகலத வேறு தன் பங்குக்கு கேட்டு அவரை வெறுப்பேற்றுகிறாள் ஆனால் ராதிகாவும் தாரிணியும் மட்டும் புரிந்த மாதி அவரோடு ஒதுங்கினார்கள்.

"அங்க்கிள் என்ன நடந்தது?"

"நத்திங்..."

"சும்மா சொல்லுங்க. நாங்க உங்களை சந்தேக படலை,"

"ஏன் படுங்களேன்... பட் ஐ டோன்ட் கேர்."

"அங்க்கிள், ப்ளீஸ் டோன்ட் பீ எ டென்ஷன். நடந்த சொல்லுங்க."

"எனத்தம்மா சொல்ல. நான் மெயின் ஸ்விட்சை ஆஃ செஞ்சது நிஜம். எழுந்து போய் மெனக்கெட் அணைச்சேன். இன்னும் சொல்லப் போனா, மெயிலை அணைக்கச் சொன்னதே நான்தான்."

"அப்ப எப்படி அங்க்கிள் கரண்ட் வந்திருக்கும்?"

"புரியலைம்மா. சம்திங் ராங்."

"இது அந்த பிசாசோட வேலை." வேகமா இடையிட்டாள் தாரிணி.

"நீங்க சும்மா இருங்க மாமி. சுவிட்சை நீங்க அழுத்தி போட்டுடுங்களா அங்க்கிள்."



"என்னம்மா நீ சின்ன குழந்தைகிட்ட கேக்கற மாதிரி வளைச்சு வளைச்சு கேட்டுகிட்டு. ஓடிகிட்டு இருந்த ஃபேன் நின்னு போச்சு. நான் சரியா மெயினை ஆஃப் பண்ணலைன்னா எப்படி நின்னுருக்கும்."

-ராதிகா கூட இப்போது கலங்கிப் போகிறாள். தாரிணியின் பார்வையில் பட்டுப்பூச்சிகளின் துடிப்பு.

"சார், நான் சொல்றத கேளுங்கோ. அந்த வீட்டை காலி பண்ணிடுங்கோ. ஏதோ இந்த மட்டுல உங்க பொண்ணு உயிர் பிழைச்சதே பெருசு."

-தாரிணியின் பேச்சுக்கு என்ன பதில் சொல்ல?

-இப்போது உள்ளிருந்து ஸ்னேகலதா வருகிறாள்.

"ஐம் சாரி அங்க்கிள்" என்கிறார்.

"எதுக்கும்மா?"

"நான் எவ்வளவோ சொன்னேன். அந்த ஃப்ளாட் வேண்டாம்னு. ஆனா அதுதான் வேணும்னு கேட்டா ரம்யா. நௌ ஷி ஈஸ் சஃப்பரிங்!"

"நீ என்னம்மா சொல்றே?"

"அந்த ஃபிளாட் சரியில்லை அங்க்கிள்."

"அப்படின்னா யூ ஆல் சோ பிலிவ் தட் பேய் பிசாசு."

"நடக்கறத பார்த்தா நம்பாம இருக்க முடியலியே."

"வாஸ்தவம்தான். நானும் குடி வரதுக்கு முந்தி வரை அப்படித்தான் நினைச்சேன். பட் நௌ ஐ ஆம் டோட்டலி சேஞ்ச்."

"அங்க்கிள். ப்ளீஸ் அங்க்கிள் நீங்க பேசாம எங்க பங்களா மாடிக்கே குடி வந்துடுங்க. அந்த ஃபிளாட் வேண்டாம்." "நான் ரம்யாவை இழக்க விரும்பலை."

"என்னம்மா நீ... நான் நினைச்சா நாளைக்கே உ
பங்களாவை விலைக்கு வாங்கிடுவேன். இங்க ஆ
பிரச்சினையில்லை. எனக்கு ரம்யாவோட மென்டாலி
தாம்மா பிராப்ளம்."

"ஆமா அவ எப்பவும் எதுலேயும் பப்ளிக் ஒபீனியனுக்கு நேர் எதிரானவ. துணிச்சல்காரி. த்ரில்-த்ரில்னு காலேஜ் டேஸ்லேயே பல அட்வென்சர்ஸ் பண்ணவ."

"என்ன பெரிய த்ரில்? இளம் கன்று பயமறிய துன்னுவா. எல்லாம் ஒரு அளவுதான். கோபால்ராவ் சா நீங்க இனியும் உங்க பெண் பேச்ச கேட்டா உங் பொண்ணு உங்களுக்கு இருக்க மாட்டா. எனக்கு தெரிஞ்சத சொல்லிட்டேன்."-அவர்கள் பேசி கொண்டிருக்கும்போதே டாக்டர் வருகிறார்.

"மிஸ்டர் கோபால்ராவ். இன்னும் இரண்டு நா அவங்க இங்க ரெஸ்ட்ல இருக்கணும். அப்புறம் நீங்க வீட்டுக்கு கூட்டிகிட்டு போகலாம். பட் வெரி கேர்ஃபுல்."

-டாக்டர் கிளம்பி விட, கோபால்ராவின் முகத்தில் இப்போது குழப்பம். 'எந்த வீட்டுக்கு செல்ல?'

## 5

நல்ல தூக்கத்தில் இருந்தாள் ரம்யா.

கோபால்ராவ் மெல்ல அங்கிருந்து கிளம்புகிறார். ஃப்ளாட்டுக்கு போய் வந்துதான் ஆக வேண்டும். ரம்யாவின் துணிமணியிலிருந்து ஃபிளாஸ்க்வரை எல்லாம் அங்கு தான் இருக்கிறது? ஆஸ்பத்திரியை விட்டு வெளியே வந்து ஆட்டோ பிடிக்கும் வரை பெரிதாக குழப்பம் ஒன்றும் இல்லை. ஆனால் ஆட்டோ உதறியபடி



ஓடும்போது உள்ளுணர்விலும் உதறல். இந்த பேய் பிசாசெல்லாம் நிஜமா?

மனதில் விஸ்வரூபமாய் கேள்வி...

இந்த உலகில் விடை காணமாட்டாமல் எத்தனையோ கேள்விகள், அதில் இந்த கேள்வி மட்டும் எப்போதும் ஒரு புதிர் கேள்வி. இம்மட்டில் அவரவர் சொந்த அனுபவம் தான் சரியான பதிலாக இருக்க முடியும் என்று அவரது நண்பர் ஒருவர் எப்பொழுதோ சொன்னது ஞாபகத்தில் மின்னுகிறது என்றால் தனக்கேற்பட்ட அந்த அனுபவம்? நினைக்க நினைக்க ஆச்சர்யம் தருகிறது. முதலில் தோளைத் தொட்டதுபோல் இருந்தது. பின்னர் ஆஃப் செய்த நிலையில் ஃபேன் ஓடியது. இதெல்லாம் எப்படி சாத்யம்? அருகில் டோனிகூட படுத்து தூங்கிக் கொண்டிருந்ததே... சரியான தூங்கு மூஞ்சி நாய்.

'ஆங்...!'

கோபால்ராவிடம் யுரேகா என்று கத்தாத குறையாக ஒரு பரவசம் ஆட்டோ டிரைவர் பிரேக் போட்டு திரும்பிப் பார்த்து "இன்னா சார்?" என்கிறான் மெட்ராசின், ஓரங்கட்டேய்' பாஷையில்.

"ஒண்ணுமில்லை, ஒண்ணுமில்லை. நீ போ."

"சும்மா சொல்லு சாரே. எத்யானு நெனைச்சு குஷியாயிட்டியா?"

"குஷியா... அப்படின்னா?"

"அட இன்னா நீ, மஜாவாயிட்டியான்னு கேட்டேன்."

"மஜாவா?"

"ஆமாம் போஸ்டரு பாத்துகினியா. மல்யாளப் படம்னாலே மன்மத சக்திதானே? அதுலையும் மல்கோவா கணக்கா குட்டிங்கோ அள்ளிங்கோங்கற மாதிரி

படுத்துகிடக்கறாங்கோ. ஆனா பாத்தாலும் சொம்ம ஜிவ்னு ஏறிக்குமே.”

-அவன் சாலை ஓர போஸ்டர்களைப் பார்த்துவிட்டு தான் கோபால்ராவ் குஷியானதாகக் கருதி பேசுவதை கேட்டு அவருக்குள் லேசான கோபம்.

அவரது குஷிக்குக் காரணமே வேறு.

பொதுவாக நாய்களுக்கு பேய்களைக் கண்டறியும் தன்மை உண்டு என்பார்கள். அதன் பார்வைக்கு மட்டும் அது தப்பாமல் பட்டுவிடும்.

அன்று டோனிகூட அருகில்தான் பாடுத்திருந்தது. தோளைத் தொட்டது பேயாக இருந்தால் அ பார்த்திருக்க வேண்டுமே?

ஸோ... நடந்தது ஒரு யதார்த்தமான சம்பவம். (அ மனப்பிரமை!

தீர்மானத்துக்கு வருகிறார் கோபால்ராவ்.

அபார்ட்மெண்ட்டும் வருகிறது.

இறங்கி நடப்பவரை அபார்ட்மெண்டே பார்க்கிறது. ராமசேஷன் ஓடி வருகிறார்.

“எப்படி இருக்கா பொண்ணு?”

“நௌ ஷீ ஈஸ் ஓ.கே.”

“எப்ப காலி பண்ணப்போறேள் வீட்ட.”

“எதுக்கு?”

“எதுக்கா? வந்த அன்னிக்கே இப்படி ஆயிடுத்தே! சென்டிமென்ட்டா அது ரொம்ப மோசமான வீடு.”

“ஐ டோன்ட் பிலீவ் தீஸ் ஆல் ஆர் பிளடி சென்ட்டிமென்ட்ஸ்...”-சொல்லிவிட்டு லிஃப்டின்



ஸ்விட்சை அழுத்த, வா என்று அவரை அந்த இரும்புகூண்டு ஏற்றுக் கொள்கிறது.

ராமசேஷனுக்கு அசடாகிப் போனதுபோல் ஒரு அவஸ்தை.

“இந்த மனுஷனுக்கு ஆனாலும் கொழுப்பு. நன்னா அவஸ்தைப்படப் போறான்...”

-அவர் போனபின் புலம்ப, மற்றவர்களிடம் இருந்தும் பதில்.

“சார்... நமக்கெதுக்கு சார் ஊர் வம்பு...”

“இது ஊர் வம்புல்ல... ஃபிளாட் வம்பு.”

-“மூக்கை நுழைப்பவர் வம்பாத்தா சுப்புடு சாஸ்திரி.

“வாய்யா... நீர் இல்லாமதான் இந்த ப்ராப்ளம் இழுத்துண்டு கிடக்கிறது. வாரும். வந்து நீரும் உம்ம பங்குக்கு கொஞ்சம் எண்ணெய் நெய்னு எதையாவது விடும்...”

“அதெல்லாம் இருக்கட்டும். கோபால்ராவ் சுருக்கமா என்னதான் சொல்றார்?”

“ஏதோ கால் தடுக்கி விழுந்துட்டா அஜாக்ரதையான ஒரு சம்பவம் மாதிரிதான் நினைக்கறார் அவர்.”

“பாப்போம்... பாப்போம்.”

“என்ன ஸ்வாமி... நீரே மிரட்ற மாதிரி பாப்போம் பாப்போம்கறேள்.”

“நான் யாருய்யா மிரட்ட? அந்த ஃபிளாட்டோட பத்மினி ஆவின்னா மிரட்டிண்டு இருக்கு.

பத்மினி உசரோட இருந்தப்பவே ரௌடிப் பொம்பளை. அநியாயமா செத்தும் போயிட்டவ. அப்ப அந்த ஆவிக்கு எவ்வளவு எனெர்ஜி இருக்கணும்.”

"ஆவிக்கு முதல்ல உடம்பே கிடையாது. அப்புறம் ஏதய்யா எனெர்ஜியும் கினெர்ஜியும்?"

"உம்மோட அகராதியில வேணும்னா அப்படி இருக்கலாம். ஃபாரின்ல நடந்த ஒரு ஆராய்ச்சியில் ஆவிகளுக்கு இருக்கற சக்தியில் பத்துல ஒரு பங்குகூட நமக்கு கிடையாதுன்னு புரூவ் ஆகியிருக்கு ஸ்வாமி..."

"நெஜமாவா?"

-சுப்புடு சாஸ்திரியின் கருத்து மேலே கோபால்ராவ் ஃபிளாட்டில் நிரூபணமாகிக் கொண்டிருந்தது. அவர் கதவைத் திறந்து பார்த்த நிலையில் ஹாலில் போட்டிருந்த அத்தனை பெரிய சோபா தலைகீழாக புரட்டிப் போடப்பட்டிருந்தது. ஹாலில் மாட்டப்பட்டிருந்த ஒவ்வொரு படங்களும் தலைகீழாக, ஆனால் தவறில்லாமல் மாட்டப்பட்டிருந்தன! அந்த காட்ரேஜ் பீரோகூட தலைகீழாக ஆனால் தூளிகூட கீறல் இன்றி தூக்கி நிறுத்தப்பட்டிருந்தது.

கோபால்ராவுக்கு தலையைச் சுழற்றியது.

பெட்ரூம் கதவை தயக்கத்தோடு திறந்தவர் அப்படியே உறைந்து போனார்.

உள்ளே ஃபேனில் தூக்கு மாட்டிய நிலையில் சவமாய் அந்த நாய் டோனி!

## 6

உள்ளே யாருக்கும் எட்டிப் பார்க்கக் கூட துணிச்சல் இல்லை. ஃபிளாட்டுக்கு வெளியேயே நின்றபடி குழுமிக் குழுமி பேசிக் கொள்கிறார்கள்.

தைரியமாக எட்டிப் பார்ப்பவள் ராதிகா ஒருத்தி தான்.



வீட்டின் அலங்கோலம் அவள் விழிகளில் பயமாய் வழிகிறது.

டோனி தொங்கும் விதம் அவள் ரத்தத்தில் ஆல்கஹாலை கலக்கிறது.

கதிகலங்கிப் போய் வெளியே வருகிறாள்.

பக்கத்து பிளாட்காரர் ஒரு புரொபசர். நடுங்கியபடி அனைவரிடமும் பதில் சொல்லிக் கொண்டிருக்கிறார்.

"கடாபுடான்னு ஒரே சப்தம்... எனக்கு ஒண்ணும் புரியலை. ராத்திரியெல்லாம் தூங்காம முழுச்சுக்கிட்டே இருந்தேன். முதல்ல வீட்டை காலி பண்ணிட்டுதான் மறு வேலையே..."

"ஆமாங்க... சின்ன குடிசையா இருந்தாகூட பரவால்லீங்க. முதல்ல போயிடுவோம்."-அவரது மனைவி வக்காலத்து வாங்கியபடி முன் வருகிறாள்.

"சார் என்னப் பண்ணப் போறீங்க?" ராதிகாவின் கேள்விக்கு கோபால்ராவிடம் எந்த பதிலுமில்லை. ஆனால் சற்று முன் வரை பேயாவது பிசாசாவது என்று நம்பிக்கை வயப்பட்டிருந்த மனதில் இப்போது நெருப்பாய் சலனம்!

"என்ன டாட் சொல்றீங்க... வீடே தலைகீழா புரட்டி போட்ட மாதிரி இருக்கா?"-ரம்யாவிடம் கேள்வி முன் மௌனமான ஆமோதிப்பு கோபால்ராவிடம்.

"நான் இதை நம்ப மாட்டேன்..."

"நீயே வந்து பார்த்துட்டு நம்பு..."

"அந்த பேய்க்கு வேற வேலையே இல்லியா என்ன? நம்மை காலி பண்ண வைக்கணும்னு நேரா வந்து மிரட்டலாமே-இதென்ன பேடித் தனமா...?"

"அம்மா அதுபேய்... அது இஷ்டத்துக்குத்தா செயல்படும்..."

"பேய்க்கே அவ்வளவு திமிரு இருந்தா, நமக்கு எவ்வள இருக்கணும்?"

"வேண்டாம் ரம்யா... பேயோட எதுக்கு நம போட்டி?"

"அப்பா நீங்களா இப்படி பேசறது? தீஸ் ஆல் ஆ ஃபன்."

"எதும்மா ஃபன்? டோனி தூக்குல தொங்கினதா?"

"வாட்?"-ரம்யாவிடம் வாய்பிளந்து அதிர்ந்த நிலை.

"ஆமாம்மா... நௌ டோனி அவுட். இப்பதா புதைச்சுட்டு வரேன்."

"அப்பா என்ன சொல்றீங்க... டோனி செத்து போச்சா?"

"யெஸ்... நீ அலட்டிக்காதே..."

"எப்படிப்பா?"

"தூக்குல தொங்கிம்மா..."

"என்னப்பா புருடா இது? ஹவ்... ஹவ்... ஹவ்வப்பா அதுக்கு கயிறை கட்டி தூக்கு போட்டுக்க தெரியு என்ன?"

"பேபி... ப்யூர்லி இட் ஈஸ் மிஸ்டீரியஸ். ஐ டோன்ட் நோ ஹவ் இட் ஈஸ் ஹேப்பன்ட்."

"நோ... எந்த ராஸ்கலோ விளையாடிப் பாக்கறான்."

"நோ ராஸ்கல். நோ ஆப்பனன்ட்."

"இல்லப்பா... இப்படி எல்லாம் நடக்குதுன்னா சம்திங் ராங்."



"நமக்கு யாரும்மா எதிரி... எதுக்காக இப்படி பண்ணனும்?"

"எதிரி நமக்கில்லப்பா... அந்த ஃப்ளாட்டுக்கு?"

"அப்படியே வெச்சுகிட்டாலும் பூட்டின வீட்டுக்குள்ள யாரால போய் இதையெல்லாம் பண்ண முடியும்? அதுலேயும் அவ்வளவு நடமாட்டமுள்ள அபார்ட்மென்ட் சிஸ்டத்துல..."

"அப்போ நீங்களும் நம்பறீங்களா?"

"நம்பாம இருக்க முடியலைங்கறேன்."

"சரி... என்ன பண்ணப் போறீங்க?"

"நாம இனி அந்த ஃப்ளாட்ல இருக்க வேண்டாம்."

"நோ டாட்... ஐ கான்ட். இப்பதான் நாம அங்க கட்டாயம் இருக்கணும்."

"ஐயோ! நீ பிடிச்சா விடமாட்டியே... நான் என்ன பண்ணுவேன்."

"ப்ளீஸ் டாட். அமைதியா இருங்க."

"எதுக்கு இன்னொரு தடவை ஷாக் அடிக்கவா?"

"கொஞ்சம் வாய மூடுங்க. பேயாம் பேய். ஸ்டுப்பிட் பேய்... இடியட் பேய்... ஸ்கௌண்ட்ரல் பேய். வரட்டும் அதை. வெச்சிக்கிறேன்."

ரம்யாவின் கொதிப்பில் காதோரத்து வியர்வைகூட வெந்நீராக...

# 7

சற்று சோர்வாக... ஆனால் பார்வையில் ஒரு தெளிவோடு ஆட்டோவில் இருந்து இறங்கும் ரம்யாவை அபார்ட்மென்ட்டே வேடிக்கை பார்க்கிறது.

"என்னம்மா இது, திரும்ப வந்துட்டே?" என்று தாரி மட்டும் தைரியமாக கேட்கிறாள்.

"மாமி. சித்த என் ஃப்ளாட்டுக்கு வாங்கோ. உங்களோ கொஞ்சம் பேசணும்"-என்றபடி லிஃப்ட் தொடங்குகிறாள் ரம்யா.

தாரிணியிடம் தொடை நடுக்கம்.

"அம்மாடி நீ என் ஆத்துக்கு வந்துடேன்."

அவள் கத்துவது ரம்யா காதில் விழுந்த இல்லையோ...

தாரிணியை இப்போது மற்ற ஃப்ளாட் வாசி பலியாடு மாதிரி பார்க்கிறார்கள்.

"ஏன் எங்களுக்கு அவகிட்ட போய் ஒட்டி தெரியாதா? இப்படி ஒருநாள் எடக்கு மொடக்கா எதா தாரிணிக்கு ஒரு இடி வேறு.

சகலத்தையும் கேள்விப்பட்ட ராதிகா மட்டும் சற் தைரியத்துடன் அவள் ஃப்ளாட்டுக்குள் நுழைகிறாள்.

"வாடி..."

"நான் வரது இருக்கட்டும். எப்ப இந்த ஃப்ளாட்ட கா பண்ணப் போறே?"

"எதுக்குடி பண்ணனும்?"

"தோ பார் ரம்யா. நீ ரொம்ப தைரியசாலியா பொண்ணு நான் இல்லேங்கலே. பிசாசு எல்லாம் கூ இருக்கோ இல்லியோ தெரியாது. ஆனா ஒண்ணு மட்டு சொல்லிக்கிறேன். நம்ம எனெர்ஜியை நாம ரைட் வேஎ யூஸ் பண்ணனும். உனக்கு ஃபைனல் எக்ஸாம் இருக் மூட்டை மூட்டையா படிக்க வேண்டியிருக்கு. எதுக் இந்த வேண்டாத வேலை?"



"நல்ல சொல்லும்மா..."-ஒத்து ஊத ஆரம்பிக்கிறார் கோபால்ராவும். முறைக்கிறாள் ரம்யா.

"பேசி முடிச்சிட்டியா...?" கடுப்பாக கேட்கும்போது ஸ்னேகலதாவும் அவள் அப்பாவும் அபார்ட்மென்ட் ஓனருமான சிவசங்கரனும்கூட அங்கு ஆஜர்.

"வாங்க வாங்க... ப்ளீஸ், உக்காருங்க."

"இருக்கட்டும் பேபி-எப்படி இருக்கு உடம்புக்கு?"

"ஐ ஆம் ஆல்ரைட் சார்..."

சிவசங்கரன் அமர்ந்துகொண்டு கால்மேல் கால் போட்டுக் கொண்ட விதத்தில் அற்புதமான ஒரு பணக்காரவளம். பல கோடிக்கு அதிபதி இப்படி நேரில் வந்திருப்பதில் அனைவரிடமும் ஒருவகை பரவசம்.

"அப்புறம் சார்..."-ஆரம்பிக்கிறார் கோபால்ராவ்.

"ஐ ஆம் வெரி சாரி மிஸ்டர் கோபால்ராவ்."

"எதுக்கு சார்?"

"இப்படி ஆனதுக்கு... நீங்க இம்மீடியட்டா வெகேட் பண்ணிடுங்க. என் பங்களாவுல மாடி உங்களுக்கு ரொம்ப ஆப்டா இருக்கும்."

-அவர் பேச்சுக்கு கோபால்ராவ் அடர்ந்த மௌனம் சுமக்கிறார். ரம்யாவோ அதைக் கேட்டு வருந்துகிறமாதிரி தெரிகிறாள்.

"என்ன பதிலைக் காணோம்?"

"சாரி சார்... வி டோன்ட் வான்ட் டு டிஸ்டர்பிங் யூ."

"ஆக்சுவலி நான்தான் உங்களை டிஸ்டர்ப் பண்ணிட்டேன். இந்த ஃப்ளாட்டை நான் வாடகைக்கு விட்டிருக்கக்கூடாது."

"அங்க்கிள், இந்த ஃபிளாட்டுக்கு ஒரு வி சொல்லுங்க, நாங்க வாங்கிக்கறோம்" இடையிடுகிற ரம்யா.

"விலைக்கா... என்னம்மா சொல்றே-எதுக்கு உன இந்த அவஸ்தை பிடிச்ச வீடு...?"

"வீடு என்ன பாவம் செஞ்சது... கல்லுக்கு சிமெண்ட்டுக்கும் ஏது சார் உணர்ச்சி? அவஸ்தை அ இதுன்னுகிட்டு..."

"அப்ப நடக்கற பேட் இன்சிடென்ஸை என்னன்னு சொல்றதும்மா?"

"அது என்னன்னு ஆராயணும்-யார் பண்றாங்கன்னு பார்க்கணும்."

"யார் பண்றாங்களா? கோஸ்ட்டும்மா."

"நீங்க கண்ணால பாத்திக்கீங்களா?"

"பாக்கலை. ஆனா பார்த்துட்டு பயந்தவங்களை-பயந்து செத்தவங்களை பார்த்துருக்கேன்..."

"சாரி அங்க்கிள், நான் நம்பத் தயாரில்லை."

"இவ்வளவு ஆனதுக்கு பிறகுமா?"

"எவ்வளவு?"

"உனக்கு ஷாக்... வீடே தலைகீழா... உங்க வீட்டு நா கூட தூக்குல தொங்கினதா கேள்விப்பட்டேன்."

"இவ்வளவுக்கு பிறகுதான் எனக்கு க்யூரியாசிட்டி அதிகமாயிருக்கு அங்க்கிள்..."

"லுக் பேபி... டோன்ட் வேஸ்ட் யுவர் டைம் உன் வயசுக்கு இந்த ரிசர்ச்செல்லாம் அநாவசியம்."

"அப்ப உங்க வயசுல யாராவது பண்ணுங்க."



"நத்திங். வீட்டை பூட்டி வைக்கப் போறேன். கிடக்கட்டும் கழுத! இதுல வாடகை வந்து எனக்கு ஆகப் போறது ஒண்ணுமில்ல. இதை இடிச்சேகூட தள்ளிடுவேன். என்ன ஒரு இடைஞ்சல்னா, முன்னேயும் பின்னேயும் மத்த ஃபிளாட்டுங்க இருக்கு. ஆதான் பாக்கறேன்."

ரம்யா அதைக் கேட்டு சிரித்தாள். அவளது பயமற்ற அந்த மனநிலை ஆச்சரியத்திலும் ஆச்சரியம். ஒரு வரப்பிரசாதமான விஷயம்.

சிவசங்கரனுக்கே அது மிக பிடித்துப் போனது.

நடுவில் ராதிகா போய் டீ போட்டு எடுத்து வந்தாள். ரம்யா அதற்கு பார்வையாலேயே நன்றி சொல்கிறாள்.

"அப்ப நீ காலி பண்ணப்போறதில்லை. என்னன்னு ஒரு கை பார்க்கப்போறே... அப்படித்தானே?"

"ஆமா அங்க்கிள்."

"ஓ.கே. அப்ப நான் ஒரு ஏற்பாடு பண்றேன். இந்த வீட்டுக்கு 24 மணி நேரத்துக்கு செக்யூரிட்டிக்கு ஏற்பாடு பண்றேன்."

"வேண்டாம். வேண்டாம்."-பலவீனமான நிலையிலும் பலமாக கத்தினாள் ரம்யா.

"ஏம்மா...?"

"அதனால எதிரி சுதாரிச்சுடுவான். அகப்படாம கூட போகலாம்."

"அப்படீங்கறே..."

"ஆமா அங்க்கிள்... நானே அதை என்னன்னு ஒரு கை பார்த்துக்கறேன்."

"பாத்து பேபி. தூண்டில்ல மீன் பிடிக்க ஆசைப்படலா திமிங்கலத்துக்கு பெரிய வலைபோடதாம்மா போகணு பிரச்சினைக்கு தகுந்த மாதிரி அணுகணும்."

"நான் பாத்துக்கறேன் அங்கிள். அதுக்குமுந்தி என இந்த வீட்ல என்ன நடந்ததுன்னு தெரியணும்."

-சிவசங்கரன் ராதிகாவை பார்த்தார். அவள் சொல் ஆரம்பித்தாள்.

## 8

பத்மினி!

பார்க்க சினிமாக்காரி மாதிரியே இருப்பாள். ஆனா பக்தி அதிகமான பெண்மணி. சதா கோயில்தா நெற்றியில் அழியாமல் அந்த விபூதி குங்குமக் கீற் பார்க்கலாம்.

இத்தனை பக்தியானவள் தாஸ் எனும் அந்த கடத்த பேர்வழிக்கு மனைவியானதுதான் பெரிய கொடுமை. அதை அவள் விதி என்பாள்.

ராதிகாதான் அவளிடம் ஆத்மார்த்தமாகப் பழகி வந்தவள். தினமும் அடி உதை என்று அவதிப்படும் பத்மினியிடம் ஒரு நாள் கேட்டே விட்டாள்.

"ஏங்க்கா... எவ்வளவு நாளைக்கு இப்படி சித்ரவதை அனுபவிச்சு கிட்டு? பேசாம விவகாரத்துக்கு ஏற்பாடு பண்ணிடுங்களேன்."

"பண்ணனும்மா. பேங்க்ல வேலை பார்க்கும்போது இந்த ஆளை நான் காதலிச்சு கல்யாணம் செய்துகிட்டேன் அப்ப தெரியாது, ஒண்ணாம் நம்பர் கடத்தல் பேர்



வழின்னு! அப்புறமா வீட்டுக்கே கஞ்சா ஹெராயின்னு சரக்குகள் வர ஆரம்பிச்சது.

ரொம்ப பயந்துபோய் இதைக் கொண்டு வராதீங் கன்னேன்.

எனக்கே அட்வைஸான்னு அடிப்பான்.

இன்னும் ஒரே வருஷம். நான்தான் மெட்ராஸ்லையே பெரிய பணக்காரன்னுவான்.

எனக்கு பயமா இருக்கும். மாட்டிக்கிட்டா எவ்வளவு பெரிய மானக்கேடு?

என் அப்பா அம்மாவை மீறி நான் திருட்டுத்தாலி கட்டிக்கிட்டு இந்த ஆளோட வந்தவ. என் கல்யாண வாழ்க்கைல நான் தோத்துட்டது அவங்களுக்கு தெரிஞ்சா துடிச்சுப் போயிடுவாங்க.

"ராதிகா... காதல்ங்கறது ஒரு கொடுமையான மயக்கம். உனக்கு அது வரவே வேண்டாம்."

-அவளது நீண்ட பதிலில் ராதிகாவிடமும் ஆண்கள் என்றாலே அரக்கர்கள் என்னும்படியான ஒரு அபிப்பிராயப் பரவல்.

இவர்களின் இந்த சண்டை அந்த அபார்ட்மென்ட் பிரசித்தம்.

ஒருநாள் சிகரம் வைத்தமாதிரி ஒரு சம்பவம் நடந்தது. தாஸ் நல்ல போதையோடும் ஒரு பெண்ணோடும் ஃப்ளாட்டுக்கு வந்தான்.

(பத்மினி எதிரிலேயே அவளை உறவுகொண்டதாகவும் பின்னால் தெரியவந்தது.)

பத்மினி துயரத்தின் விளிம்புக்குப் போன சம்பவமே அதுதான்.

இதற்குமேல் இந்த ஆளைவிட்டு வைத்தால் ஆ
என்று ஒரு முடிவிற்கு வந்தவள் உடனடியாக ஒரு க
எழுதினாள். போலீசுக்கு...

கவரில் வைத்து தபாலிலும் சேர்த்தாள்.

பின் ஊரிலுள்ள அத்தனை கோயில்களுக்கும் போ
வந்தாள்.

இறுதியாக ராதிகாவை அழைத்தாள்.

"ராதி நான் போய்ட்டு வரேன்..." என்று விரக்தியா
பேச்சைத் துவக்கினாள்.

"எங்கக்கா..."

"கண் காணாத உலகத்துக்கு..."

"அக்கா என்ன சொல்றீங்க..."

"ஆமாம்மா... அந்த ஆள் என்னை ரொம்ப படுத்தறா
அவனை சும்மா விடக்கூடாது. என் எதிரிலேயே ஒ
பெண்ணை கூட்டிகிட்டு உறவு வெச்சுக்கறான். எவ்வ
நெஞ்சழுத்தம்."

"பெட்டர்... அக்கா நீங்க விவாகரத்து வாங்கிடுங்க."

"அது என்னை காப்பாத்திக்க உதவலாம். ஆ
அவனுக்கு அதுவே விடுதலையை தந்திடும்."

"அதனால?"

"அவன் எந்த வகையிலேயும் தப்பிக்க கூடா
பொம்பளைன்னா வீக்கர் செக்சுன்னும்-அவளால ஒண்ணு
பெரிசா பண்ணமுடியாதுன்னும் ரொம்ப போ
நினைக்கறதாலதான் இவன் மாதிரி ஆட்கள் நல்லா
டெவலப் ஆகறாங்க."

"அக்கா, உங்க பேச்சு எனக்கு பயத்தைத்தருது. நீங்க பாட்டுக்கு ஆவேசத்துல எதையாவது பண்ணிக்காதீங்க."



"இல்ல ராதிகா. திட்டமிட்டுதான் நான் செயல்பட்டுகிட்டு இருக்கேன். செத்தாலும் என் ஆவி அவனை சும்மாவிடாது. அதை ஞாபகத்துல வெச்சுக்கோ. இந்த ஃப்ளாட்டுக்குள்ள இனி வேற எந்த ஒரு பெண்ணும் நுழையக்கூடாது."

"செத்தாலுமா?"

"ஆமா... சாகத்தான் போறேன். என் சாவுக்கு அவன் தான் காரணம்னு எழுதிப்போட்டுட்டேன். அதோட அவன் கடத்தல்காரன்கற எவிடன்சைகூட போலீசுக்கு அனுப்பிட்டேன்."

"வேண்டாம்-இது முட்டாள்தனமான முடிவு."

"ஆமா... தீர்வு தரத் தெரியதவங்களுக்கு இது ஒரு முட்டாள்தனமான முடிவுதான்."

-ராதிகாவுக்கு அதற்கு மேல் நிற்க பயமானது. ஓடினாள், துணையாக யாரையாவது கூட்டி வரலாம் என்று. அந்த ஒரு நிமிட இடைவெளிக்குள் எல்லாம் முடிந்து விட்டது. உடம்பில் மண்ணெண்ணெயைக் கொட்டிக் கொண்டு பத்மினி கரிக்கட்டையாக பார்க்க வந்தவர்கள் எதிரில் விழுந்தாள்.

அடுத்த அரை மணியில் போலீஸ் வந்தது.

துடித்துக் கொண்டிருந்த போகாத உயிர், வாக்கு மூலம் வேறு தந்து விட்டுத்தான் உயிரை விட்டது.

ஃப்ளாட்டை இழுத்துப் பூட்டி சீல் வைத்தது போலீஸ்

இது எதுவும் தெரியாதபடி கொடைக்கானல் பக்கம் ஒரு குட்டியோடு கூத்தடித்துக் கொண்டிருந்தவனை கோழி அமுக்கிப் பிடித்தது போலீஸ்!

# 9

"இப்ப அந்த தாஸ் ஜெயில்லியா இருக்கான்?"

-கதை கேட்ட நிலையில் ரம்யாவின் கேள்வி அனைவரிடமும் ஆமோதிப்பு.

"அந்த சாவுக்குப் பிறகுதான் இந்த வீட்ல பேயோ ஆதிக்கமா?"

"ஆமா."

"செத்துப்போன பத்மினிக்கு கோபம் தாஸ் மே தானே?"

"ஆமா."

"அப்படி இருக்க ஃப்ளாட்டுக்கு வர்ரவங்க மேல அது ஏன் கோபம் வரணும்?"

"இதெல்லாம் விடை தெரியாத கேள்விம்மா. என் பெஸ்ட் ஆஃப் லக். ஜாக்ரதை-நாங்க வர்றோம்."

-சிவசங்கரன் பேசியது போதும் என்பது போ கிளம்புகிறார்.

ஸ்னேகலதா தன் தோழியை ஏதோ விசித்திர பொருளை பார்க்கிற மாதிரி பார்த்தபடி அப்பா தொடர்கிறாள்.

"தைரியமா போ ஸ்னேக்... அந்த ஆவியாச்சு இ நானாச்சு..." ரம்யாவின் பதிலைக் கேட்டு ஆச்சர்ய படாதவர்கள் அங்கு இல்லை.

ஆனால் கோபால்ராவ் மட்டும் சோகமாக அடுத் நடக்கப் போவதை நினைத்துப் பயந்தபடி...

கட்டிலில் சாய்ந்தபடி அனுராதாரமணனின் நாவலை படித்துக் கொண்டிருக்கிறாள் ரம்யா.



"என்னம்மா எப்பவும் சேஸ் நாவல்ஸ்தான் படிப்பே, அதிசயமா தமிழுக்கு தாவியிருக்கே?"

"ஆமாம்ப்பா... இந்த நாவல் ரொம்ப இன்ட்ரஸ்ட்டா இருக்கு அதான்..."

"அது சரி உனக்கு சாப்பிட என்ன பண்ணட்டும்?"

"ஒண்ணும் பண்ணாதீங்க... நான் பண்ணித் தர்றேன். நீ ரெஸ்ட் எடுடா..."

"போச்சுடா... விட்டா என்னை கிழவியாக்கி கைல ஒரு குச்சியையும் கொடுத்துவீங்கப்பா நீங்க நகருங்க. முதல்ல தக்காளி சூப் வைக்கறேன். அப்புறம் மற்றதெல்லாம்."

-புத்தகத்தை மடக்கி வைத்துவிட்டு உற்சாகமாக எழுந்திருக்கிறாள் ரம்யா.

கையைக் காலை உதறி விட்டுக் கொண்டு ஒரு குட்டி வாம்அப் செய்துவிட்டு சமையல்கட்டை நோக்கி நுழைகிறாள்.

அடுப்பில் பாத்திரம் ஏறிக் கொள்கிறது.

தண்ணீர் கொதிக்க வைக்க வேண்டும். பக்கத்து பாத்திரத்தில் தண்ணீர் இல்லை, அருகே வாஷ்பேசின் சிங்கில் தண்ணீர் பிடிக்க பைப்பை திருகிவிட்டு பாத்திரத்தை நீட்டியபோது, முதலில் குதித்து வந்தது தண்ணீர், போகப்போக செக்கச் சிவக்க அடர்த்தியாக ரத்தம் போல கொட்ட ஆரம்பித்தது.

ரம்யாவுக்கு பக்கென்றானது.

பாத்திரத்தை கீழே வைத்துவிட்டு விரலால் அந்த சிவந்த நீரை கலக்கிப் பார்த்துவிட்டு முகர்ந்தபோது கதி கலங்கியது.

ரத்தமேதான்!

அந்த மருத்துவக் கல்லூரி மாணவிக்கு மீ... பரிச்சயமான திரவம்.

அதிர்ந்து போய் பைப்பைப் பார்த்தபோது இப்போ... அதில் சுத்தமான தண்ணீர்.

அந்த சின்னப் பெண்ணுக்கு லேசாய் தலை... சுழற்றியது.

பாத்திரத்தை அப்படியே கீழே வைத்துவிட்டு "அப்பா..." என்றபடி வெளியே வந்தாள் அந்த அறையைவிட்டு.

"ஏம்மா... என்ன... என்னாச்சு?"-அவள் வந்த வே... கோபால்ராவைக்கூட கலக்கியது.

"அப்பா பைப்புல ரத்தம்... ரத்தம்பா..."

"எந்த பைப்புல?"

"சிங்க் பைப்புல... வந்து பாருங்கள்..."

கோபால்ராவ் வேகமாக சமையல் கட்டுக்குள் நுழை... பாத்திரத்தை பார்த்தார்.

நல்ல தக்காளிச் சிவப்பில் ரத்தம்.

"எப்படிம்மா...?"

"தெரியலைப்பா..."

"வா பக்கத்து வீட்டுல இருக்கறவங்களை கேட்போ... எல்லோருக்கும் காமனா ஒரே பைப் லைன்தானே?"

"ஆமா... ஆனா உடனேயே நல்ல தண்ணியும் வ... ஆரம்பிச் சுடிச்சுப்பா..."

"நான் சொன்னேன் நம்பலை நீ... இப்ப அனுபவி. யா... கிட்டேயாவது போய் சொன்னாலும் நம்மைதான் குத்த... சொல்லுவாங்க."



-கோபால்ராவ் பெரிதாக அலுத்துக் கொள்கிறார். ...ரம்யாவிடம் கிட்டதட்ட ஸ்தம்பித்த நிலை. அடுத்த ...ஸ்டெப்பை எப்படி எடுப்பது? என்கிற குழம்பிய நிலை. ...பைப்பைப் பார்க்கிறாள். திறந்து திறந்து மூடுகிறாள். ...நல்ல தண்ணீர் அடங்கி அடங்கி வெளிப்படுகிறது.

இந்த ரத்தம் எப்படி சாத்யம்?

பத்மினி நிஜமாலுமே இது உன் வேலைதானா? கேள்விப் ...பந்து உள்விழுந்து நாலா பக்கமும் எகிறியது.

"ரம்யா...வா வெளிய கொஞ்சம் போய்ட்டு வருவோம்."-கோபால்ராவ் கூப்பிடுகிறார்.

போகலாமா? ரம்யாவுக்கும் ஆசையாக இருக்கிறது. கொஞ்சம் மெண்டல் பேலன்ஸ் செய்து கொண்ட மாதிரி இருக்கும்.

"சரி டாட்..."

-இருவரும் கிளம்புகின்றனர்!

## 10

கதவைப் பூட்டிக் கொண்டு சாவியை பாக்கெட்டில் போட்டபடி லிஃப்டை நோக்கி நடக்கின்றனர். பக்கத்து ஃப்ளாட் புரொபசர் எட்டிப் பார்க்கிறார்.

"உனக்கு ரொம்ப தைரியம் குழந்தை?" என்கிறார்.

"ஆமா உங்க பைப்பிள் ஒழுங்கா தண்ணி வருதா?"

-இது கோபால்ராவ்.

"அமர்க்களமா... ஏன் எதுக்கு கேக்கறீங்க சார்."

"இல்ல கேட்டேன்..."

"இல்ல நீங்க கேட்ட விதத்தை பார்த்தா உங்க பைப்புல வேற ஏதோ வந்த மாதிரி தெரிஞ்சது, அதான் கேட்டேன்."

-குபீரென்று வியர்த்தது ரம்யாவுக்கு.

"அப்பா வாயை மூடிக்கிட்டு வாங்கப்பா..."-பிடித்து இழுக்கிறாள்.

"ஆமா எங்க கிளம்பிட்டீங்க?"

"ஜஸ்ட் வாக்கிங்..."

"போய்ட்டு வாங்க. வீட்டுக்குள்ள இருக்கறதவிட வெளிய இருக்கறதுதான் ரொம்ப சேஃப் ஆனா விஷயம்."-புரொபசர் விடமாட்டார் போல தெரிகிறது.

ரம்யாவுக்கு புரொபசரின் பேச்சு எரிச்சலை தந்தது. பேசாமல் லிஃப்டை நெருங்கி இறங்க ஆரம்பித்தாள். கீழே அபார்ட்மென்டை விட்டு வெளியேறியபோது எதிர்பட்டாள் தாரிணி.

"சாரி ரம்யா... நீ கூப்டதுக்கு என்னால வர முடியலை ஆமா எதுக்கு கூப்பிட்டே?"

"ஒண்ணுமில்லை மாமி சும்மாதான்."

"இனிமே எதானும் தேவைப்பட்டா நீ வா என் ஃபிளாட்டுக்கு, என்னால உன் ஃபிளாட் பக்கம் வர முடியாது. உயிரோட இருந்தப்பவே எனக்கும் பத்மினிக்கும் ஆகாது. இப்ப கேக்கவே வேண்டாம்."-ரம்யா அந்த பதிலைக் கேட்டு சிரித்துக் கொண்டாள்.

"ஆமா எங்க கிளம்பிட்டே?"

"சும்மா வாக்கிங்."

"போய்ட்டு வாங்கோ..."

அந்த அபார்ட்மென்ட்டு வெளியே பிரதான தார்ச் சாலை திக்குமுக்காடியபடி பல்லவன்-திணறிக்கொண்டு



மற்ற வாகனங்கள் என்கிற டிராஃபிக்கான சூழ்நிலை. பொலூஷன் மிகக் கெட்டநிலை. காற்றிலும் ஈரப்பதம் இல்லாத புழுக்கம்.

புழுக்கத்தோடு டிராஃபிக்கில் ரொம்ப தூரம் போகப் பிடிக்கவில்லை. மூங்கில் தூசியும் துப்பும் ஏறி 'வீட்டுக்குப் போங்க' என்று துரத்தியது.

"அப்பா திரும்பிடலாம்."

"ஆமாம்மா... இந்த டிராஃபிக்ல நாலுநாள் நடந்தா வியாதி பிடிச்சே செத்துடுவோம்."

-இருவரும் திரும்பி நடக்கத் தொடங்கினர். அப்போது சாலையில் ஒரு பிணஊர்வலம், ஆட்டபாட்டத்துடன் வந்து கொண்டிருந்தது.

மிக இளவயதுப் பெண் ஒருத்தியின் சடலம்.

இறந்தும் மிக அழகாகத் தெரிகிறாள். உடம்பெல்லாம் மஞ்சள் பூசி சுமங்கலியாக போய் சேர்ந்திருக்கிறாள். நோயோ நொடியோ அவளை கொண்டு போயிருக்க வாய்ப்பில்லை என்பது நன்றாகத் தெரிகிறது.

நின்று கவனிக்கும் ரம்யாவுக்கும் ஏனோ இனம்புரியாத நெருடல்.

"என்னம்மா பாக்கறே?"

"பாவம்ப்பா... சின்ன வயசுலியே போயிட்டா..."

"என்ன கஷ்டமோ..."

"ஏம்ப்பா இவகூட ஒரு பத்மினியா இருக்கலாம் இல்லியா?"

அவர்கள் பேச்சுக்கு நடுவில் அந்தபிணம் டிராஃபிக்கில் அகபட்டு நின்றது. நன்றாகப் பார்க்க முடிந்தது. கை விரலெல்லாம் நன்குநீல நீளமாக... மார்பின்மேல் வைத்து

துணியால் கட்டியிருந்தார்கள். சுற்றிலும் படுசோ முகங்கள்.

“ஏங்க... எப்படி செத்தாங்க?”

குடைச்சல் தாங்காமல் ரம்யா கேட்டுவிட்டாள்.

“உம்... தலைப்பிரசவத்துல பூடுச்சும்மா...”-பட்டென் பதிலில் ஒரு சின்ன திணறல் ரம்யாவிடம்.

ஓ... பெண்களுக்கு பிரசவம் என்கிற ஒரு மறுஜென் கதவு திறக்கிறது. அதிலும் தடுக்கிவிழுந்துவிட வாய்ப்புகள் ஏராளம் என்பதெல்லாம் இப்போது உள் ஓடுகிறது.

ஒரு வழியாக டிராஃபிக் சரியாகி பிணம் நகரத் தொடங்குகிறது ரம்யாவும், கோபால்ராவும் கூட டிராபிக் பிடியில் இருந்து மீண்டும் அபார்ட்மெண்ட் பக்கம் திரும்புகின்றனர்.

“என்ன சார்... அதுக்குள்ள...” சுப்புடுதான் கேட்கிறார்.

“அதுக்குள்ளன்னா?”

“இல்லை... வாக்கிங் போனமாதிரி தெரிஞ்சது. உடனே வந்துட்டீங்களேன்னேன்...”

“ஆமா... உங்களுக்கு வேற வேலையே கிடையாதா... யார் எங்க போறாங்கன்னு பாக்கறதுதானா உங்கவேலை?

-ரம்யாவின் மடக்கல்முன் சுப்புடு வகையாக மாட்டிக் கொண்ட மாதிரி முகம் தூக்கினார்.

ஓடிவந்தாள் தாரிணி.

“நன்னா கேட்ட ரம்யா, இந்த கிழடுக்கு ஊர்வம்புன்னா பால்பாயசம்.” என்று அவளுக்கு வக்காலத்து வாங்கினாள்.

சுப்பிடு முகம் மேலும் அஷ்டகோணலாகியது.



ரம்யா வாரியது போதும் என்கிற மாதிரி லிஃப்டில் ஏற ஆரம்பித்தாள். தயங்கித் தயங்கி கோபால்ராவ்...

“ஏம்பா... ஃப்ளாட்டுக்கு திரும்பறத நினைச்சாலே பயமா இருக்கா?”

“இல்லியா பின்னே? எது எப்படி கிடக்கோ?”

-லிஃப்ட் மூன்றாவது ஃப்ளோரில் அவர்களை இறக்கி விட்டு திரும்பத் தொடங்கியது.

காரிடாரில் யாரையும் காணோம்.

நல்ல அமைதி,

தன் ஃப்ளாட் முன்போல் நின்று பூட்டை பார்த்த போது பூட்டியது பூட்டியதுபோல் அப்படியே.

## 11

கதவை திறந்துகொண்டு உள் நுழைந்தபோது நல்ல வேளை உள்ளே எந்த மாற்றமும் இல்லை.

எல்லாம் அதனதன் இடத்தில்.

ஆனால் உள்நுழைந்த வினாடியில் சுவர் கெடிகாரம் மட்டும் மணி ஆறு என்கிறமாதிரி சப்தமிட ஆரம்பித்தது.

ஆனால் உள்ளபடியே மணி ஐந்தே முக்கால்தான்.

எப்படி இப்படி கால்மணிக்கு முன்னதாக மணி அடிக்கிறது.

ஆச்சரியமாய் இருந்தது.

ஒருவேளை கெடிகாரம் கெட்டுவிட்டதோ...?

சரி, பிறகு கழட்டிப் பார்த்துக் கொள்ளலாம் என்ற நினைப்புடன் சமையலில் இறங்க ஆரம்பித்தாள் ரம்யா.

அந்த ரத்தம் தோய்ந்துபோய் அவரைப் பார்த்தது.

துணிச்சலாக அந்த பாத்திரத்தை எடுத்து ஃபிரிட்ஜுக்குள் வைத்தாள். மகளின் செயல் கோபால்ராவை கணிசமாக மிரட்டியது.

“என்னம்மா இது கர்மத்த ஃபிரிட்ஜுக்குள்ள வைக்கறே”

“என்னப்பா பண்ணச் சொல்றீங்க. குடிச்சுடலாம்ங் கறீங்களா?”

“சீச்சீ... கொட்டிடும்மா...”

“இல்லப்பா. காரணமாகத்தான் வெச்சிருக்கேன். இருக்கட்டும்பா...”

“விளையாடாதேம்மா...”

“நான் எங்கப்பா விளையாட்றேன். நம்மகூடதான் யாரோ விளையாட்றாங்க.”

“சரி சரி, உன்னை பேசி ஜெயிக்க முடியாது. என்ன சமையல் பண்ணப்போறே?”

“சப்பாத்தி குருமா.”

“குருமாக்கு உருளைக்கிழங்கு இல்லியேம்மா.”

“போய் வாங்கிட்டு வாங்க...”

“உன்னை தனியா விட்டுட்டா...”

“சரி அப்பா, நான் உங்களை தனியா விட்டுட்டு போகவா...”

“ஐய்யய்யோ...வா இரண்டு பேரும் சேர்ந்து போய்ட்டு வரலாம்...”

-ரம்யா அதைக் கேட்டு சிரித்தாள்.

“அப்பா... அநாவசியமா பயப்படாதீங்க. அவ்வளவு தான் சொல்வேன். போய்ட்டுவாங்க...”



“என்னம்மா பொண்ணு நீ. எந்த அடிப்படைல இவ்வளவு தைரியமா இருக்கே நீ?”

“ஒரு அடிப்படையும் கிடையாதுப்பா... நீங்க போய்ட்டு வாங்க...”-அவர் அரைமனதாக அங்கிருந்து கிளம்பினார். திரும்பி திரும்பி பார்த்தபடி நடக்கலானார்.

மணி ஆறு! சின்ன முள்ளும் பெரிய முள்ளும் சரியாக காலம் காட்ட திரும்பவும் இப்போது ஆறு முறை மணியடித்தது.

நிச்சயமாக இது அசாத்யம்.

முதல் முறையாக ரம்யாவினுள் பயம் வந்து எழும்பத் தொடங்கியது. கடிகாரத்தையே உற்றுப் பார்க்கிறாள்.

வெளியே இருள் கட்டிவிட்டது.

விளக்கை போட்டு உள் இருட்டை துரத்த வேண்டி இருந்தது.

விளக்குகள் பளிச்சிட்ட போதிலும் மனப்பிரமை உள்ளே யாரோ இருப்பதுபோல் நினைக்க வைத்தது.

போய் சோபாவில் விழுகிறாள்.

தனது தைரியம் என்பது வெறும் அசட்டு விஷயம் ஆகிவிடுமோ? பயம் வந்து பக்கத்தில் உட்கார்ந்து அவளைப் பார்த்துக் கேட்கிற மாதிரி கூட இருக்கிறது.

ஊரே பயப்படும் ஒரு விஷயத்தில் தான் மட்டும் எந்த நம்பிக்கையில் இத்தனை தூரம் எதிர்த்துக் கொண்டு...

## 12

இந்த ஆவி சமாசாரம் நிஜமோ?

ஆமாம்... ஒன்று மற்றொன்றாக மாறித்தான் தீர வேண்டும்.

காகிதம் கூட எரிந்தால் சாம்பலாகிறது. சாம்பல் மண்ணாகிறது. மனிதன் கூட இறந்தபின் ஏதாவது ஒன்றாக ஆகித்தானே தீர வேண்டும்? அவனை இயக்கும் உயிர்தான் ஆவியோ? அந்த உயிர் இயங்கத்தான் உடம்பு தேவையாக இருக்கிறது. அந்த உடம்பு போன நிலையில் அது எப்படி இயங்க முடியும். அது எதைக் கொண்டு யோசிக்கும். உடம்பாறப்பட்ட உயிருக்குத்தான் பசி காமம் பழி உணர்வு மண்ணாங்கட்டி எல்லாம்.

உடம்பில்லாத உயிருக்கு இது இருக்க வாய்ப்பே இல்லையே... அப்படி இருக்க அது எந்த சக்தியை அடிப்படையாக வைத்து இப்படி மிரட்டுகிறது.

என்னை மிரட்டி அதற்கு ஆகப் போவதென்ன?

ரம்யாவினுள் சோபாவில் சயனித்த நிலையில் கேள்விகள்... கேள்விகள்... கேள்விகள்...

வெளியே போய் காய்கறி வாங்கிவிட்டு கோபால்ராவ் வந்தது கூட தெரியாதபடி மனதுக்குள் கேள்விகள்.

"என்னம்மா சிலை மாதிரி உக்காந்துட்டே. நா வெளியே போயிருக்கச்சே ஏதாவது நடந்ததா?"

"இல்லைப்பா..."

"அப்புறம் ஏன் ஒரு மாதிரி இருக்கே."

அதற்கு பதிலை கெடிகாரம் சொன்னது. ஆமாம் ஆ... இருபது என்கிற நிலையில் அதனிடம் இப்படி டாண்டா... சப்தம், அதிலும் வேகவேகமாக...

"என்னம்மா இந்த கெடிகாரம் நினைச்சப்பல்லா... அடிக்குது?"



சட்டென்று இப்போது யாரோ அழும் சப்தமும் கேட்க ஆரம்பித்தது. கோபால்ராவ் முகம் வெளிறத் தொடங்க, ரம்யா சப்தம் வந்த திக்கைத் தேடுகிறாள்.

படுக்கை அறைக்குள் இருந்து வந்த மாதிரிதான் தெரிகிறது. எட்டிப் பார்க்க பயமாக இருந்து, சமாளித்து எட்டிப் பார்த்தபோது சப்தம் அடங்கிப் போய் விட்டிருந்தது.

"என்னம்மா இது... இந்த வீட்ல நீயும் நானும் ஜீவிக்கப்போற முதல் ராத்திரியே பீதியோட தொடங்குதே..."

பயப்படாதீங்கப்பா, சமாளிச்சுடுவோம. "ரம்யா குரல் அளவில் நிமிர்ந்தாலும் முகம் என்னவோ அவளும் நடுங்குவதை நிரூபிக்கிற மாதிரி தெரிந்தது.

"பேசாம இரண்டு பேரும் இந்த ஹால்லையே படுத்துப்போம்..."

"சரிப்பா... நீங்க பாயைப் போடுங்க.

நான் சமையலை ஆரம்பிக்கிறேன்.

"இரும்மா, நானும் உள்ள வந்து ஒத்தாசை பண்றேன்."

"இரும்மா, நானும் உள்ள வந்து ஒத்தாசை பண்றேன்."

"வேண்டாம். நீங்க டி.வி. பாருங்க..."

-கோபால்ராவ் டி.வி.யை திருகினார். சவுண்டாக வைத்துவிட்டு தன்னை மறக்க ஆரம்பித்தார்.

உள்ளே ரம்யாவும் கோதுமை மாவை பிசைய ஆரம்பித்தாள். அடுப்பை மூட்டி கல்லை வைத்து மாவை இட்டு போடவும் தொடங்கினாள்.

ஹாலில் டி.வி.யில் ஏழு மணி செய்திகள்.

உரக்க வாசித்துக் கொண்டிருந்தார் சந்தியா ராஜகோபால்.

சமையல் அறையில் மெல்ல வெப்பம் அதிகம் பர
போல் ஒரு உணர்வு.

வென்டிலேட்டர் ஃபேனை ஆன் செய்ய
அப்போதுதான் ஞாபகத்துக்கு வந்தது. ஸ்விட்
தட்டிவிட்ட பிறகும் ஓடாமல் நின்றது.

மெல்ல சமையல்கட்டின் அந்த கடப்பைக் கல்மே
மேடை ஏறி வென்டிலேட்டர் ஃபேனை நெருக்கத்
பார்த்தபோது மறுபக்கம் தெரிந்தது. மறுபக்கமாக பக்
பிளாட்டின் சமையல்கட்டின் வென்டிலேட்டர்
தெரிந்தது. ஏனோ அந்த வென்டிலேட்டர் துவாரத்
வென்டிலேட்டர் இல்லை. ஒரு ஆள் நுழைய முடி
அளவில் துவாரமாய் தெரிந்தது.

இரண்டு ஃபிளாட்டின் அந்த சமையல் அறை பகுதிக்
நடுவில் ஒரு ஆறடி இடைவெளி. மேலிருந்து தரைய
அந்த இடைவெளி கிச்சன் டாய்லெட் பாத்ரூம்க
கழிவுகளை எடுத்துச் செல்லும் ராட்சத குழாய்களே
கன்ஸ்ட்ரக்ட் செய்யப்பட்டிருப்பதெல்லாம் துல்லியமா
தெரிந்து போயிற்று.

ரம்யா சகலத்தையும் பார்த்தபடி வென்டிலேட்ட
ஃபேன் விசிறியை தோசைத் திருப்பியால் லேசாக சுற்
விட்டுப் பார்த்தாள்.

சில சமயம் இப்படி சுற்றிவிட்டால் சுழலும்.

ஊஹூம்... அந்த வென்டிலேட்டர் சுழலவில்லை. மாறா
அந்த வென்டிலேட்டரே கடகட வென்று ஆடியது.

தொட்டு அசைத்தபோது அப்படியே சாய்ந்து ரம்யாவி
கைகளில் விழுந்தது.



அந்த துவாரத்தில் வெறுமனே ஸ்க்ரு போட்டு முடுக்காமல் கொள்ளாமல் பொம்மை போல் தூக்கி வைக்கப்பட்டிருந்தது. கனெக்ஷன்வயர் கட் ஆகியிருந்தது.

ரம்யாவினுள் பரபரவென்று பூச்சி பறக்கத் தொடங்கியது. வினாடியும் தாமதிக்காமல் வென்டிலேட்டர் ஃபேனை அப்படியே வைத்துவிட்டு கீழ் இறங்கினாள்.

விறுவிறு என்று வெளியே வந்தாள்.

செய்தி கேட்டு முடிந்திருந்த கோபால்ராவ் மகளை அதிர்ச்சியுடன் பார்க்கிறார்.

ஃபிளாட்டுக்கு வெளியே போனவள் போனவள் பக்கத்து ஃபிளாட்டை நோக்கிதான் நடந்தாள்.

அது பூட்டியிருந்தது. மெடிகல் ரெப்ரசன்டேடிவ் பயந்தபடியே தங்கியிருப்பதாக சொன்ன அதே ஃபிளாட்.

ஹலோ மேடம்... யாரைப் பாக்கறீங்க மெடிகல் ரெப்பையா?''

-இந்த வீணாய் போன புரொபசர் காத்திருந்த மாதிரி வெளிப்பட்டு கேட்கிறார்.

“ஆமாம் சார்...''

“அவர் மாயாமச்சீந்திரா மாதிரி. எப்ப வருவார் எப்ப போவார்னே தெரியாது.''

“ஓ.கே...''-வழிசலாய் சிரித்தபடி திரும்பி வருகிறாள். உள் நுழைந்து கொள்கிறாள்.

கோபால்ராவ் அவள் செய்கை புரியாமல் பார்க்கிறார்.

“என்னம்மா... எங்க போனே?''

“கிட்டதட்ட தெரிஞ்சுட்ட உண்மையை கன்ஃபார்ம் செய்துக்கப்பா...

“எந்த உண்மையை?''

-அவள் சொல்ல ஆரம்பித்தாள்.

அவரின் வாய் காதுவரை பிளந்து விரிகிறது. இறுதியாக ஒரு கேள்விதான் கேட்டார்.

"ஈஸ் இட் ட்ரூ?"

"ட்ருவாத்தான் இருக்கணும். வேறவழியே இல்லை." ஆமோதிப்பாய் கெடிகாரம் மணி அடித்தது. ஆனா சரியான நேரத்தில் சரியான விதத்தில்!

# 13

ராத்திரிப் பொழுது-

பகலிலேயே தாறுமாறான விஷயங்கள் நடந்த அ ஃப்ளாட்டில் இரவுப் பொழுதில் கேட்கவே வேண்டாமே

ஆனாலும் கோபால்ராவும், ரம்யாவும் மிக தைரியமாக தெரிகிறார்கள்.

"அப்பா, நீங்க பயந்துகிட்டு தூங்கற மாதிரி ஆக்ட் கொடுக்கிறீங்க... ஓ.கே...?"

"நீ மட்டும் அந்த விஷயத்தை சொல்லலேன்னா நிஜமாலுமே அப்பா பயந்துகிட்டு தானேம்மா தூங்குவேன்?"

"இப்ப சொல்லலைன்னு நினைச்சுக்குங்க பயப்படுங்க. நாம பயப்பட்றோம்கறது கன்ஃபர்மா தெரியணும்."

அதுக்கு என்ன பண்ணலாம்கறே?"

"இரண்டு பேருமே இன்னிக்கு நம் ஃப்ளாட்டுக்கு வெளியில கார்டன்லதான் படுத்துக்கறோம்."

"படுத்துக்கிட்டா?"



"படுத்துக்கணும். அப்பதான் பயமுறுத்தல் கன்டினியூ ஆகும். பண்றது யாருங்கறதும் தெரியவரும் என் டவுட்டும் கன்ஃபர்ம் ஆகும்."

அதே போல் இருவரும் ஃப்ளாட்டுக்கு வெளியே பாயை விரித்து படுக்க ஆரம்பிக்கிறார்கள்.

-ரம்யா நைட்டியில் மிக சோர்ந்த மாதிரி இருக்கிறாள்.

-கோபால்ராவிடம் செயற்கையான புலம்பல்.

"கேட்டியா... எல்லாரும் எவ்வளவு சொல்லியிருப்போம். எதையாவது காதுல வாங்கினியா? இப்ப பயமா இருக்கு, உள்ள படுக்க மாட்டேன்னா என்ன அர்த்தம்?"

-சத்தம் போட்டு கத்துகிறார் கோபால்ராவ். ஃப்ளாட் வாசிகள் காதில் விழுந்து எதிரொலிக்க எட்டிப் பார்க்கின்றனர்.

-புரொபசருக்கு மட்டும் லாட்டரி விழுந்த மாதிரி ஒரு சந்தோஷம்.

"என்ன சார்... வெளிய வந்தாச்சா? என்ன ரம்யா- உன்னை ஜான்சி ராணின்னு நினைச்சேன்-இப்படி பயந்து நான்சென்ஸ் ராணியாயிட்டியே..."-கிண்டலிக்கிறார்.

"நல்லா சொல்லுங்க சார். பெரியவங்க சொன்னா கேட்டுக்கணும். தனக்குதான் எல்லாம் தெரியும்னு பேசினா இப்படித்தான்."

"இப்படித்தான்னா... எப்படி சார்?"

"உள்ள ஒரே சப்தம் சார் ராசஸன் கொறட்டை விட்ற மாதிரி, யாரோ அழுற மாதிரி, அகோரமா சிரிக்கற மாதிரி... ஓ... வெரி நாஸ்டி வாய்ஸ்."

"உம்... அப்புறம்?"-புரொபசர் ஏதோ கதை கேட்கிற மாதிரி கேட்கிறார்.

"என்ன சார், எங்கசோகம் உங்களுக்கு சுவாரஸ்யம தெரியுதோ?"

-கோபால்ராவ் பாய்கிறார் பதிலுக்கு.

"அப்ப என்ன செய்யப் போறீங்க... காலிபண்ணிட போறீங்களா?"

'ஆமா பண்ணிடனும்.'

"நோ நோ... பாப்போம்-சமாளிச்சு பாப்போம்" குறுக்கிட்டு வேகமாக மறுக்கிறாள் ரம்யா.

"அப்ப குழந்தைக்கு இன்னும் கூட முழுசா பயம் வரல போலிருக்கு."

"அவ கண் எதுக்கு அந்த செத்துப் போன பத்மினி நேர வந்து அகோரமா நின்னாதன் என் மகளுக்கு பயம் வரும்."

-கோபால்ராவ் அச்சு அகலாக உருப்போட்ட மாதிரிபே பேச புரொபசரிடம் முகம் போன விதத்தில் அவர் ஏதே ஒரு வகை முடிவெடுத்தது போல் ஒரு தோற்றம்.

"சரி சரி, இப்படி காரிடார்ல படுக்காம என் வீட்ல வந்து படுங்க வாங்க..."-அழைக்கிறார்.

"பரவால்ல சார்... உங்களுக்கு எதுக்கு தொந்தரவு?"

"தொந்தரவு இல்ல சார்... உதவி. நாங்களும் பயந்துகிட்டு தானே இருக்கோம். ஒருத்தருக்கொருத்தர் ஆறுதலா இருக்க மில்லையா?"

கோபால்ராவ் ரம்யாவைப் பார்க்க-ரம்யா இமையசைப்பில் ஓ.கே. என்று சொல்ல. இருவரும் தங்கள் ஃப்ளாட்டை பூட்டிவிட்டு புரொபசர் ஃப்ளாட்டுக்குள் நுழைகின்றனர்.

புரொபசர் மனைவி முகத்தில் இருவரின் வருகையும் இப்போது பூப்போட்டதுபோல் சந்தோஷத்தை உருவாக்குகிறது

"வாங்கோ... வாங்கோ..." என்று வரவேற்கிறாள்.



"நகர்ந்து படுடி... ரெண்டுபேரும் இங்கதான் இன்னிக்கு படுக்கப் போறாங்க." புரொபசரிடம் வீச்சலான கட்டளை.

விடிந்து விட்டது!

தூங்கினதே தெரியாத விழிப்பு!

கோபால்ராவ்தான் முதலில் எழுந்து கொண்டார். பக்கத்தில் படுத்திருந்த ரம்யாவையும் உசுப்பினார். ரம்யா கண்ணைத் திறக்க மிக கஷ்டப்பட்டாள்.

இத்தனை அழுத்தமான ஒரு தூக்கம் தூங்கி நெடுநாள் ஆன மாதிரி ஒரு பிரமிப்பு அவளிடம்.

அவளுக்குமேல் புரொபசரும்-அவர் மனைவியும்.

எல்லாரையும் கோபால்ராவ்தான் எழுப்பினார்.

கெடிகாரத்தைப் பார்த்தால் மணி எட்டு!

"அடக் கர்மமே... இது என்ன இப்படி தூங்கியிருக்கோம்."

"அதானே... ராத்திரி பூரா பயப்பட்றதுக்கே நேரம் சரியா இருக்கும். தூக்கமே வராது. இன்னிக்கு என்ன இப்படி தூங்கி வழிஞ்சிருக்கோம்."-புரொபசரும் வியக்கிறார்.

ரம்யாவிடம் மட்டும் தீவிரமாய் ஏதோ சிந்தனை.

'செயற்கையாக ஏதோ ஒன்று தாக்கினதால்கூட இருக்குமோ?'

அவள் கேள்விக்கு பதிலும் உடனே கிடைத்தது.

ஹாலில் ஒரு ஓரமாக பல்லி ஒன்று தரை மேல்விழுந்து கிடந்தது கிட்டே நெருங்கியும் ஓடாமல் செத்ததுபோல் கிடந்தது. ஒரு குச்சியால் பிரட்டிவிடவும் கைகால்களை லேசாக அசைத்துவிட்டு சாகவில்லை என்று சொல்லாமல் சொன்னது.

நடுவில் புரொபசரும்-அவர் மனைவியும் இதை அதிசயமாக பார்க்கின்றனர்.

“என்னம்மா இது பல்லி ஆராய்ச்சி?” கேட்கின்றனர்.

‘ஒண்ணுமில்லை சார்... நாம மட்டுமல்ல பல்லிகூட ராத்திரில மயங்கியிருக்கு. இந்த அறைக்குள் தூங்க வைக்கற ஒரு ஸ்ப்ரே பாஸ் ஆகியிருக்குன்னு நினைக்கறேன் என்றாள் ரம்யா.

“என்னது ஸ்ப்ரேவா? என்னம்மா சொல்றே...?”

“ஆமா சார் நம்ம தூக்கம் ராட்சஸ தூக்கம்-நடுவுல எழுந்துடக் கூடாதுன்னு தீர்மானிக்கப்பட்ட தூக்கம்.”

“அட நீ வேற... எங்களுக்கு இந்த மாதிரி நிறைய தடவை ஆகியிருக்கு... என்கிறார் புரொபசர் மனைவி.

“என்ன சொல்றீங்க...?”

“ஆமாம்மா... இந்த ஃப்ளாட்ல இதுவும் ஒரு அதிசயம் தான். அதுக்குதான் தலைல அடிச்சிக்கிறேன்-காலி பண்ணுங்கன்னு.”

“நான் என்ன வீடு பார்க்காமலா இருக்கேன். நல்ல வீடா கிடைக்க வேண்டாமா?”

அவர்கள் புலம்பலுக்கு நடுவில் அங்கிருந்து மெல்ல வருகின்றவள் தன் ஃப்ளாட்டை பார்க்கிறாள்.

பூட்டியது பூட்டியபடி.

-அதே சமயம் அந்த பக்கத்து ஃப்ளாட்டான மெடிகல் ரெப்பின் ஃப்ளாட்டும் பூட்டியிருக்கும் அதே நிலையில்...

ஆனால் சுரீர் என்று ஒரு மாறுதல்.

முந்தின இரவில் கோத்ரேஜ் பூட்டு தொங்கிக் கொண்டிருந்தது. இப்போது அலிகார் பூட்டு.

‘என்றால் நடுவில் அவன் வந்து போயிருப்பானோ?’’



கேள்வியோடு தன் ஃப்ளாட் கதவைத் திறந்து கொண்டு உள் நுழைந்தவள் போன வேகத்தில் வெளியே ஓடிவந்தாள்.

‘உள்ளே ஹால் முழுக்க துண்டிக்கப்பட்ட கைகள்-காதுகள், கட்டை விரல்கள் என்கிற மனித மாமிசத் துண்டுகள்’

## 14

அந்த அத்தனை மாமிசத் துண்டுகளும் இப்போது ஒரு முறத்தில்! சுற்றிலும் அந்த மூன்றாம் தளத்து குடித்தனக்காரர்கள் அத்தனைபேரும் நின்று விரித்த விழி மூடாமல் வேடிக்கை பார்க்கிறார்கள்.

“இதுக்கு முந்தி அந்த வில்லியம்ஸ் ஃபேமிலி குடியிருந்தப்பகூட இப்படித்தான் கையும் காலும் பிஞ்சு பிஞ்சு வந்து விழுந்தது. அதுக்கப்புறம் இப்போ திரும்பவும்...”

-கூட்டத்தில் ஒரு உதடு சொன்னது ரம்யாவை உசுப்புகிறது.

“அவங்க இதைப் பாத்த உடனே வீட்டை காலி பண்ணிட்டாங்களா?”

“இதை போலீசுக்கு கொண்டு போகலையா?”

“அது எப்படி... அப்புறம் ஃப்ளாட் மானம் கப்பலேறிடாதா?”

“என்னதான் செஞ்சாங்க?”

“ப்ளாட்டை இழுத்து மூடிட்டோம். நீங்க வந்து தான் திறந்தது.”

-அவர்கள் பேச்சில் புதுப்புது பரிமாணங்கள்.

“ஆமா இதுக்குப் பிறகும் நீங்க இந்த ஃப்ளாட்ல இருக்கத்தான் போறீங்களா?”

“இன்னிக்கு சாயங்காலம் முடிவெடுப்பேன்.”

-ரம்யா சொன்ன விதத்தில் ஏதோ ஒரு தீர்மானம் அவளிடம். அந்த சாயங்காலம் என்கிற வார்த்தை வேகமாகப் பரவ ஆரம்பித்தது என்னவோ குறித்துக் கொள்ளப்பட வேண்டிய ஒரு விஷயம்.

ஊருக்கு அத்தனை வெளியில் இல்லாமலும்-அதே சமயம் ஊருக்குள்ளும் என்று சொல்ல முடியாதபடிக்கும் கிடக்கும் அந்த மயானம் முன் இப்போது அந்த போலீஸ் ஜீப் கிரீச்சிட்டு நிற்கிறது.

வெட்டியான் பீடி பற்ற வைத்துக் கொண்டிருந்தவன், பாய்ந்து ஓடி வருகிறான்.

ஜீப்பிலிருந்து இறங்குகிறார் கமிஷனர் மிஸ்டர் சாரி, கூடவே ரம்யா.

“எஜமான், கும்பிட்றேங்க.” வெட்டியான் ஓடிவந்து கை கூப்ப, கமிஷனர் சாரியின் பார்வை மயானத்தை ஊடுருவுகிறது.

திட்டுத்திட்டாய் சமாதிகள்.

உடைத்துப் போட்ட பாடை மூங்கில்கள்-பானைகள் ஓடுகள்...

“சாமி, யாரும் நம்ம ஊட்ல பரமபதம் போய்ட்டாங்களா குழி வெட்டணுங்களா?”-அவன் கேட்கும் விதத்தை பார்த்தால் சாவுக்கு குழி சொல்ல வந்ததாக நினைக்கிறான் என்பது தெரிகிறது.

“குழி வெட்டணும். ஆனா வரப்போற பொணத்துக்கு இல்ல. புதைச்சுட்ட பொணத்துக்கு.”-சாரியின் பதிலில் அவன் ஒரு வினாடி உலுங்கினாற் போலாகிறான்.



“என்ன முழிக்கிறே?” கடூர அதட்டலோடு உள்ளே நுழையத் தொடங்குகிறார் சாரி. உடன் நெருடலின்றி ரம்யா!

“எஜமான் பேச்சே விளங்கலீங்களே,”

“கொஞ்ச நேரத்துல விளங்கிடும் பாரு. ஆமா நேத்து ஒரு வயசுப் பொண்ணை அடக்கம் பண்ணாங்களா?”

“ஆ... ஆமாம் எஜமான்.”

“எங்க அதை அடக்கம் பண்ண சமாதி?”

-அவன் தயங்கிபடி கைகாட்டி அழைத்துச் செல்கிறான். சமாதி கபடி விளையாடிய மண்பரப்பு போல் கிளர்ந்து போய் கிடக்கிறது.

“ஆமா சமாதி ஏன் இப்படி இருக்கு?”

“எப்படிங்க...?”

“மத்த சமாதியெல்லாம் பூசி ஒழுங்கா இருக்குல்ல.”

“அது வந்து... அது வந்து...”

“சரி சரி... அந்த பிணத்தை இப்ப வெளிய எடு பாக்கணும்.”

-அவன் தலையை சொரிகிறான். கண்களில் அநியாயத்துக்கு ஒரு வகை தயக்கத்தைக் காட்டுகிறான்.

“இப்ப வெளியே எடுக்கப் போறியா இல்லை.”

-அந்த மிரட்டல் தாளாமல் திரும்ப அந்த சமாதியை தோண்ட ஆரம்பிக்கிறான்.

மெல்ல வெளிப்பட ஆரம்பித்த அந்த சடலத்தின் உடல் பாகத்தில் சொல்லி வைத்த மாதிரி காதுகளோ கைகளோ, காலில் விரல்களோ இல்லை. நறுக்கி எடுக்கப்பட்டிருக்கிறது.

சாரி ரம்யாவை அதிக பிரகாசத்தோடு பார்க்கிறார்.

"உன் யூகம் ஹன்ட்ரட் பர்சன்ட் ஓ.கேம்மா!" -என்று ஸ்பாட் சர்ட்டிபிகேட் தருகிறார். தந்த கையோடு முஷ்டியை மடக்கி ராக்கி படநாயகன் போல ஒரு குத்து-அந்த வெட்டியானுக்கு.

"எஜமான்... எஜமான்... நான் நடந்ததை சொல்லிட்றேன். சொல்லிட்றேன்." என்று அந்த மயான மண்ணில் விழுந்து புரண்டு எழுந்திருக்கின்றான்.

"சொல்லு."

அவன் சொல்லத் தொடங்க இருவரிடமும் ஆச்சரியத்தில் கண் இரண்டிலும் உஜாலா பிரகாசம்!

## 15

நவரத்னா அபார்ட்மென்டே வேடிக்கை பார்க்கிறது.

போனவாரம் குடிவந்த ரம்யாவும்-கோபால்ராவும் மறுவாரம் முதல் நாளே காலி செய்து கொண்டு கிளம்பினால் வேடிக்கை பார்க்காமல் என்ன செய்வார்களாம்?

"சொல்லச் சொல்ல கேக்காம வீரப்பிரதாபனா நினைச்சுண்டு குடிவரவும் வேண்டாம்-இப்படி பயந்து ஓடவும் வேண்டாம்."

"ஏதோ இந்த மட்டுல உயிரோடையாவது திரும்பிப் போறாளே..."

"வாஸ்தவம்தான். இனி அந்த ஃப்ளாட்டை பூட்டி சீல் வைக்கச் சொல்லணும். யார் வந்து கேட்டாலும் திறக்கக்கூடாது!"



"என்னைக் கேட்டா... நல்ல மந்திரவாதி ஒருத்தரை கூட்டிண்டு வந்து மந்திரிக்கலாம். அந்த பத்மினி ஆவியை மடக்க ஏற்பாடு செய்யலாம்."

"எத்தனை தடவைதான் செய்வா அதெல்லாம் இப்ப அவுட் ஆஃப் பேஷனா வேற ஆயிடுத்து."

"பேசாம ஒரு பிள்ளையாரை அங்க கொண்டுபோய் வெச்சு கோயிலாக்கிடலாம்..."

"அதுதான் சரி... எந்த பேயும் பிள்ளையார்னா ஒண்ணும் பண்ணாது."

-அபார்ட்மென்டே பேசித் தீர்க்க சாமான் செட்டை வேனில் ஏற்றத்தொடங்குகிறாள் ரம்யா.

-வேணுக்கு அருகில் ராதிகா தாரிணி ராமசேஷன் வம்பானந்தா சுப்புடு என்கிற கூட்டம்.

-அதில் சுப்பிடு மட்டும் ஏனோ அழுது நிமிர்ந்த மாதிரி இருக்கிறார்.

"ஆமா இப்ப எங்க குடிபோகப் போறேள்?"-தாரிணி கேட்கிறாள்.

"அஷ்டலட்சுமி அபார்ட்மென்ட். நங்கநல்லூருக்கு."

"ஓஹோ இங்க நவம். அங்க அஷ்டமா?"

"ஆமா மாமி... அங்கேயும் பேய் பிளாட்தான்." கண் சிமிட்டியபடி அவள் பேசுவதில் ஏதோ ஒரு மர்மம்.

-வழக்கமாய் வளவளவென்று பேசி மூக்கை நுழைத்து வெளுத்து வாங்கும் சுப்புடு சாஸ்த்ரி கூட அமைதிப் புழுவாய், மிகச் சோகமாய் இருப்பதும் கூட மர்மத்தின் உச்சக்கட்டம்.

சென்ட்ரல் ஜெயில்.

மனுப்போட்டு விட்டு கைதிகளைப் பார்
காத்திருப்பவர்களில் அவனும் பிரதானமாக இருந்தான்.

அவனை ஒரு கழுகுக் கண் உற்றுப்பார்த்து
கொண்டிருப்பது தெரியாமல்...

அவன் முறை வரவும் எழுந்து செல்கிறான்.

கம்பிக் கூண்டுக்கு முன் போய் நிற்க-மறு பக்கமா
ஜெயிலில் இருந்து வெளிப்படுகிறான் அவன் எதிர்பார்த்த
அந்த நபர்.

"என்னடா... சக்ஸசா?"-ஜெயில் மனிதனிடம் கேள்வி

"விடுவேனா தாஸ்." பதிலில் வந்து நிற்பவன்தான் தா
என்னும் நிரூபணம்.

"குட்... போய் சாமுவேலைப் பார்த்து பணத்த
வாங்கிக்கோ. அப்படியே நீ காலி பண்ணிடு. அடுத்த அந்த
ஃப்ளாட்டுக்கு நம்ப ராஜகுரு போயிடட்டும். அப்ப தான்
வேற யாராவது குடி வந்தாலும் மிரட்டத் தோதா இருக்கும்.
யாருக்கும் சந்தேகமும் வராது."

"இனி யாரும் நிச்சயம் வரமாட்டாங்க தாஸ்!"

"இப்படித்தான் முன்ன கூட சொன்னே... ஆனா
குடிவரலியா?"

"இருக்கலாம். ஆனா இதுவரை குடிவந்ததுலேயே
ரொம்ப போல்டான பொண்ணு இவதான். ரொம்ப
சாமர்த்தியமா நடந்துக்க வேண்டி இருந்திச்சு."

"இவளை விட இனி போல்டா யாரும் இருந்துடப்
போறதில்லை, அபார்ட்மென்டே அரண்டு கிடக்குது.
ஆகையால நிச்சயம் வேற யாரும் வரப்போறதுக்கு வழியே
இல்லை."

"சரி, வேற விசேஷம் உண்டா?"



"ஆமா... எதுக்கு இப்படி மிரட்டச் சொல்றே-அந்த
ஃப்ளாட் ஏன் காலியா இருக்கணும்னு நினைக்கறே,
என்கிட்ட கூட சொல்லக் கூடாதா?"

"நீ எத்தனை தடவை கேட்டாலும் என் கிட்ட இருந்து
உனக்கு பதில் வராது. சொன்னதை மட்டும் செய்
காரணமில்லாம நான் நடந்துக்கலை."

"அதுதான் என்ன?"

"அது எனக்கும் என் பார்ட்னர் சாமுவேலுக்கும்
மட்டுமே தெரிஞ்ச விஷயம். உனக்கு தெரிய
தேவையில்லை. சாமுவேலுக்கே முழு விஷயம் தெரியாது,
உனக்கு சொல்லிடுவேனா என்ன?"

-தாஸ் என்னும் அவன் நறுக்கிக்கொண்டு உள்
திரும்பிவிட சோர்ந்து திரும்பவும் இவன் தோள்மேல்
இப்போது கமிஷனர் சாரியின் கரங்கள் விழுகின்றன.

"ஆர் யூ மிஸ்டர் பார்த்திபன். மெடிக்கல்
ரெப்ரசன்டேடிவ்?"

"யெஸ்... நீங்க..."

"நான் போலீஸ் கமிஷனர் சாரி... வெங்கடாச்சாரி."

-அவன்-அதாவது பார்த்திபன் உதற ஆரம்பித்தான்...

"ஹலோ..." என்றபடி அங்கு தோன்றிய ரம்யா வேறு
அவன் உதறலை அதிகப்படுத்தினாள்.

"ஆமா உங்க நண்பர் தாஸ் என்ன சொல்றாரு...?"

"சாரியின் கேள்வி முன் பார்த்திபன் பயங்கர திரு
திரு..." என்ன பேசினீங்கறத ஒட்டு கேட்டுகிட்டுதான்
இருந்தோம். இப்ப தேவை எல்லாம் நீங்கதான். ஃப்ளாட்ல
மிரட்டல் வேலை பார்த்தீங்கறதுக்கான வாங்குமூலம்.
அப்புறம் அதை எப்படி செய்தீங்கங்கற விளக்கம்.

-அவனும் வேறுவழியின்றி அதைச் சொ
ஆரம்பித்தான்.

"இங்க வேண்டாம். நம்ப ஆபீஸுக்கு
சொல்லுங்க."

-அவன் பலியாடுபோல அவர்களைப் பின்தொடர்
கமிஷனர் ஆபீஸ் செல்ல ஆரம்பித்தான்.

## 16

அவனது வாக்குமூலம் ஆரம்பமானது.

"என் பேர் பார்த்திபன்.

மெடிகல் ரெப்ரசன்டேடிவ்தான் என் ஜாப்.

ஜெயில்ல இருக்கற தாஸ், என் நண்பன். தப்பு
தொழில் செய்யற ஒரு நபர் தாஸ். நானும் ப
ஆசைப்பட்டு அதுக்கு துணை போயிருக்கேன்.

அவன்தான் நவரத்னா அபார்ட்மென்ட்ல மூன்றாவ
ஃப்ளாட்ல அந்த முப்பதாம் நம்பர் வீட்டுக்கு யாரு
குடிவந்துடாம பார்த்துக்க சொன்னான்.

எதுக்காக அப்படி சொன்னான்னு இன்னிக்கு வரைக்
தெரியாது. ஆனா நிச்சயம் வலுவான காரணம் இருக்குன்
மட்டும் தெரியும்.

அவன் சொன்னதுக்கு ஏற்ப பக்கத்து ஃப்ளாட்ல கு
இருந்துக்கிட்டு குடிவர்றவங்களை மிரட்டறதுதான் எ
வேலை.

ஒரு மூணு வருஷமா யாரும் குடிவரலை. ஆகையா
பிரச்சனை இல்லாம இருந்தது, நானும் பெரும்பாலும் அ
ஃப்ளாட்டுக்கு போகாம பூட்டி வெச்சிருந்தேன். எப்பாவ
போய் வருவேன்.



ரம்யாவுடன் கோபால்ராவ் வரப்போறது தெரிஞ்சதும் திரும்ப போய்வர ஆரம்பிச்சேன்.

ஜெயில்ல தாஸ் கூட ரொம்ப பயந்தான். எப்படியாவது மிரட்டி அனுப்புன்னான். கோபால்ராவ் குடிவந்த ஜோர்ல கதவு திறந்திருந்த நிலையில ஒரு நாள் அவரைப் பார்க்கப்போனேன். அப்ப கோபால்ராவ் பேப்பர்ல சுவாரஸ்யமா இருந்தார். ரம்யா கூட சமையல் கட்டுல.

நான் அவர் தோளைத் தொட்டேன்.

அவர் ரம்யாதான்னு நினைச்சுட்டார், மெயினை அணைக்கப் போனார். நான் சட்டுன்னு ஒரு ஐடியா பண்ணி பூனைபோல போய் அந்த மெயினை திரும்ப ஆன் செய்து பீதி கிளப்ப ஆரம்பிச்சேன்.

பைப்லைன்ல ஆட்டு ரத்தத்தை சாமர்த்தியமா பாஸ் பண்ணினேன். இதுக்காக ஒரு பைபாஸ் லைனை நான் ஏற்கனவே அந்த மூணுவருஷ கேப்ல செய்து வெச்சிருந்தேன்.

என் ஃப்ளாட்ல இருந்துகிட்டே இதைச் செய்யமுடியும். செய்தேன். நீங்க போய் பார்த்தா புரிஞ்சுக்குவீங்க.

நடுவுல மினிடேப் ரிக்கார்டர்ல அலாரம் பெல் வாய்ஸை ரெக்கார்ட் பண்ணி. அதையும் அந்த ஹால் வால் கிளாக்ல உள்ள ஃபிக்ஸ் பண்ணினேன்.

இருபத்து நாலு மணி நேரத்துல ஒரு குறிப்பிட்ட அறுபது நிமிஷம் மட்டும் அந்த டேப் ஒர்க் பண்ணும். அதுக்கான ரிமோட் சிஸ்டம் என் கன்ட்ரோல்ல. தப்பு தப்பான நேரத்துல மணி அடிச்சுக் குழப்பும்.

அப்புறமா இந்த அழற சப்தம், ஒட்ற சப்தம்லாம் கூட ரெக்கார்ட் வாய்ஸ்தான்.

ஆனா கரணம் தப்பினா மரணம்கற மாதிரியான விஷயம் இது. புத்திசாலிகள் உடனே இந்த விஷயத்துல ஆராய ஆரம்பிச்சுடுவாங்க.

உதாரணமா கெடிகாரத்தை அப்பவே டெஸ்ட் பண்றதுக்காக எடுத்திருந்தா என்னோட பிளான் தெரிய வந்திருக்கும்.

ஆனா ஒழுங்கா ஓடிக்கிட்டுருக்கறதால பெரும்பாலும் கழட்டிப் பார்க்க தோணாது. பயம் காரணமாகவும் இதை எல்லாம் செய்யத் தோணாது.

இப்படித்தான் அடுக்கடுக்கா மிரட்டினேன்.

வென்டிலேட்டர் ஃபேன் துவாரம் வழியா என் ஃப்ளாட்ல இருந்து அந்த ஃப்ளாட்டுக்குப் போக வழி செய்துகிட்டு உள்ள போய் வந்து சாமான்களை எல்லாம் புரட்டிப் போட்டு பேய் அட்டகாசம் செய்த மாதிரி எல்லாம் செய்தேன்.

உச்சகட்டமா சுடுகாட்டுக்கு போய் அப்பதான் புதைச்ச பிணத்தோட உறுப்புகளை வெட்டி எடுத்துக்கிட்டு வந்து வீட்டுக்குள்ர போட்டு பீதியை அதிகமா கிளப்பினேன். நடுவுல தப்பித்தவறி யாரும் எழுந்து வந்து பார்த்துடக் கூடாதுன்னு மயக்க மருந்து ஸ்ப்ரேயை புரொபசர் வீட்டு சாவித் துவாரம் வழியா பாஸ் பண்ணினேன். மற்ற விஷயத்துக்கு தாக்கு பிடிக்கறவங்க கூட இந்த விஷயத்துல நிச்சயம் தூங்கியாகணும். அதோட பயந்தே தீரணும்!

ஆனா எப்படி இதை போலீஸ் தெரிஞ்சுகிட்டு என்னை பிடிச்சதுங்கறது தான் எனக்கு புரியவே இல்லை.''



-அவனது நீண்ட வாக்குமூலத்தை கேட்டுவிட்டு கமிஷனர் சாரி, ரம்யாவை பார்க்கிறார். அவள் ஃப்ரிட்ஜில் எடுத்து வைத்த ரத்தத்தை ஒரு பாலீதீன் பையில் பேக் செய்த நிலையில் எடுத்து நீட்டுகிறாள்.

''இது ஆட்டு ரத்தம்கறது எனக்கு அப்பவே தெரியும். அதான் எவிடென்சுக்காக எடுத்து வெச்சேன்'' என்றவள் அன்றைய வாக்கிங்கை மிக சிலாகிப்பாக சொல்லிக் கொள்கிறாள்.

அதில்தான் அந்த பெண் பிணத்தை பார்க்க முடிந்தது. மஞ்சள் பூசிய உடம்பும்-நீளமான அந்த விரல்களும் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது.

இந்த நிலையில் மறுநாள் அதே விரலும் கையும் அகலாத மஞ்சள் திப்பியோடு-கொஞ்சம் போல் மண்திப்பியோடும் வீட்டுக்குள் கிடந்த போது புத்தியில் ஒரு குட்டி யூகம்.

'அருகாமலையில் மிக சமீபமாகப் புதைக்கப்பட்ட பெண் பிணத்து பாகங்களாக இது இருக்குமோ?''

-யூகத்தை கமிஷனர் சாரியுடன் போய் உறுதி செய்து கொண்டாயிற்று.

அப்படியே அபார்ட்மென்டின் வம்பு மனிதரை அதாகப்பட்டது சுப்புடு சாஸ்திரிகளைப் பிடித்து விசாரித்ததில் பார்த்திபன் தான் கண்ட நேரங்களில் வந்து போகின்றவன் என்கிற விஷயமும் உறுதியானது.

பார்த்திபன் தான் சுடுகாட்டுக்கு வந்து பிணத்தையும் வெளியே எடுத்து உறுப்புகளை எடுத்துக் கொண்டு போனவன் என்பது வெட்டியான் வாக்குமூலத்திலேயும் உறுதியானது.

இதெல்லாம் எதற்கு?

பார்த்திபன் ஃபாலோ பண்ணியதில் அது தாஸுக்கா என்பது தெரிந்து விட்டது.

சரி தாஸ் எதற்கா இப்படி மிரட்டச் சொன்னான்?

அந்த ஃப்ளாட்டுக்கு ஏன் மற்றவர்கள் குடி வர கூடாது...?

## 17

அந்த அபார்ட்மெண்ட் முன் நிற்கும் ஆட்டோ விலிருந்து பார்த்திபனும் தாஸும் இறங்குகின்றனர். தாஸ் சர்தார்ஜி போல உருமாறியிருக்கிறான்.

"எனக்கும் பரோல் கிடைக்கும்னு நான் கனவுல கூட எதிர்பார்க்கலை" என்றபடி லிஃப்ட் ஏறுகிறான். உடன் இறுக்கமான முகத்தோடு போலீசின் ஏற்பாட்டுப்படி மௌனமாக பார்த்திபன். பரோல் ரகசியம் அவனுக்கு தானே தெரியும்!

"ஆமா ஏன் எதுவும் பேசமாட்டேங்கறே. என்னை யாராவது அடையாளம் கண்டுபிடிச்சிட்டா என்ன பண்றதுன்னா?"

"ஆமா... ஆமா..."-பயத்துடன் பார்த்திபனிடம் சமாளிப்பு:

"டோன்ட் ஒர்ரி. இன்னும் சிலமணி நேரம்தான். அப்புறமா ஐயா இந்த கன்ட்ரியை விட்டே பறந்துடுவேன்."

"டேய் தாஸ், நீ ஒரு பரோல் கைதி."

"ஆனா பெரிய கோடீஸ்வரன். இந்த கோடீஸ்வரனுக்காக தனி ஃப்ளைட்டே கூட வரும். பாக்கத்தானே போறே...!"

"உன் பேச்சே புரியலை எனக்கு."



"இப்ப புரியாது. போகப் போக புரியும். ஆமா உன் ஃப்ளாட்ல இருந்து நான் குடியிருந்த ஃப்ளாட்டுக்கு சுலபமா போகமுடியும் தானே?"

"போகலாம். வென்டிலேட்டர் வழியா-ஆனா பார்த்து போகணும். அபார்ட்மெண்ட்டுக்கு வெளிய பின்பக்கமா யாராவது இருந்தா பார்த்துட சான்ஸ் உண்டு."

"கவலையே இல்லை. நான் அந்த ஃப்ளாட்டுக்குள்ள போனா போதும். அதுக்குப் பிறகு வெறும் 10 நிமிஷம் தான்."

"அந்த பத்து நிமிஷம் எதுக்கு தாஸ்?"

-பார்த்திபன் கேள்வி முன் ஒரு அசட்டுச் சிரிப்பு தாஸிடம்.

லிஃப்ட் இருவரையும் வெளியே துப்புகிறது. நடக்கின்றனர்.

புரொபசர் வழக்கம்போல் எட்டிப் பார்த்துவிட்டு கண்ணாடியை நெகிழ்த்தியபடியே திரும்புகிறார்.

தாஸுக்குள் கொஞ்சம் நெருடல்.

"புரொபசர் பயதானே?"

"ஆமா..."

"காலி பண்ண வைக்கணும்-இவனையும்."

"வந்த வேலைய கவனி தாஸ்."

-தன் ஃப்ளாட் கதவைத் திறந்துகொண்டு இருவரும் உள் நுழைகின்றனர்.

-நுழைந்த நொடியில் தாஸ் வென்டிலேட்டர் துவாரம் அருகே தான் போய் நிற்கிறான்.

"தாஸ் அவசரப்படாதே..."-பார்த்திபனிடம் எச்சரிக்கை.

“கழிக்கற ஒவ்வொரு நொடியும் என் வாழ்க்கைல நா... கிடைக்கவே கிடைக்காதுன்னு நினைச்சுகிட்டிரு... நொடிகள் பார்த்திபன்.”

-உள்ள இருந்தும் லட்சக் கணக்குல செலவு செய்து அ... ஃப்ளாட்டுக்கு யாரும் குடி வந்துடாதபடி செய்யப்ப... ஏற்பாட்டை யோசிச்சு பார்.

எல்லாத்துக்கும் ஒரு முடிவு வரப்போகுது பார்த்திப...

“அப்படி அந்த ஃப்ளாட்டுக்குள் என்னதான் இருக்கு...

“என் கூட வந்து பார்.”

-தாஸ் தாமதிக்காமல் துவாரம் வழியாக உள் நுழை... ஆரம்பிக்கிறான்.

-பின்னாலேயே பயந்தபடி பார்த்திபன்!

அந்த பேய் ஃப்ளாட் என்று வர்ணிக்கப்பட்... பூட்டப்பட்டிருக்கும் பிளாட்டினுள் சமையல் கட்... வழியாக உள்இறங்கும் தாஸ் முதலில்போய் உற்றுப்பார்... சீலிங் ஃபேனைத் தான்!

-அடுத்து ஃப்ளக் பாயின்ட் ஸ்விட்ச் போர்டை...!

-அவசர அவசரமாக பாக்கெட்டில் இருந்து ஸ்க்... டிரைவரை எடுத்துப் போனில் முன்பக்க டியூப் போ... மூடியை கழட்டுகிறான். உள்ளே ஒரு பொட்டலம்!

-அடுத்து ஸ்விட்ச் போர்டிலும் அதேபோல் ஒ... பொட்டலம்.

-மூன்றாவதாக ஹாலின் அலமாரி ஃப்ரேமை லேசா... அடித்து உடைக்க அதனுள்ளும் ஒரு பொட்டலம்,

மூன்று பொட்டலங்களையும் பிரித்து உள்ளங்கையி... கவிழ்த்துக் கொண்டபோது ஜன்னலில் ஒளியோ... மின்னியபடி வெளிவந்து விழந்தது வைரக்கற்கள்!



“தாஸ் இந்த பதுக்கலுக்கு தானா இத்தனைப்பாடு?”

-பார்த்திபன் வாய் பிளந்தபடி கேட்கிறான்.

“பின்ன ஒரு காசா... இரண்டு காசா? பத்து கோடிடா இதோட வேல்யூ! இதைப் பதுக்கி வெச்சிருந்த கையோட போலீஸ்ல மாட்டிக்கிட்டேன்.

-இப்பத்தான் வெளிய வரவும் முடிஞ்சது. யார்கிட்டேயும் சொல்லவும் முடியாது. எடுத்துகிட்டு கம்பி நீட்டிட்டா...?”

-அவன் கேட்டு முடிக்கவும்-அந்த ஃப்ளாட்டின் வாசல் கதவும் திறக்கவும் சரியாக இருந்தது.

-தாஸுக்கு பகீரென்றது.

வாசல் கதவருகே உற்சாக வெற்றிப் புன்னகையோடு “தேங்க்யூ பார்த்திபன்...” என்கிற நல்லிணக்கத்தோடு கமிஷனர் சாரி... கூடவே ரம்யா! ஊஹுஂம் கன்னிப் பருந்து!

(முற்றிற்று)